# அதிர்வெண்

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்
செய்தி மடல்

மலர் ஒன்று | இதழ் ஒன்று | 2016 செப்டெம்பர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தின் அடிப்படை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமே

தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சி, உலகமானது தனி ஒரு அலகாக மாறுவதை எவ்விதத்திலும் தடுக்க முடியாத ஒரு காரணியாக மாற்றியுள்ளது. கனேடிய தொடர்பாடல் நிபுணரான மார்ஷல் மெக்லுஹன் (Marchall McLuhan) 1960 களின் ஆரம்பத்தில் முன்வைத்த "பூகோள கிராமம்" (Global Village) எனும் எண்ணக்கருவானது, தற்காலத்தையும் எதிர்காலத்தையும் வைத்து மேற்கொள்ளப்பட்ட பாரிய எதிர்வுகூறலாகும். அது தற்போது யதார்த்தமாக மாறி வருகின்றது. இதன் காரணமாக, தொடர்பாடலின் அடிப்படையில் தேசிய இராச்சியங்களின் பூகோள ரீதியிலான எல்லைகள் அழிவடைந்து வருகின்றன. இனங்களுக்கிடையே காணப்பட்ட வெவ்வேறு தனித்துவமான இயல்புகள், ஒரே பூகோள தனித்துவமாக மாறி வருகின்றது. வெவ்வேறு கலாச்சாரங்கள், ஒன்றுடன் ஒன்று இணைந்து, வேகமாக மாற்றமடைந்து, ஒரு தனி கலாசாரம் எனும் நிலைக்கு மாற்றமடைந்து வருகின்றது. மற்றுமொரு வகையில், சமூக கோளங்கள் (Social Spheres) பாரிய அளவில் விரிவுற்று, திறந்து, ஒன்றுடன் ஒன்று பௌதிக தூரம் அகன்று, ஒவ்வொருவருக்கும் இடையே உறுதியான உள்ளார்ந்த தொடர்பொன்றை ஏற்படுத்தி வருகின்றது.

இதேவேளை இணையத்தளம், கையடக்க தொலைபேசி போன்ற புதிய ஊடகங்களின் தோற்றத்தின் காரணமாக, மனிதர்கள் மிருகங்களாக மாறி, மிகவும் தனிமைப்படுத்தலுக்குள்ளாகி (Isolate) வருகின்றனர். இது மற்றுமொரு வகையில், மனித உள்ளார்ந்த தொடர்புகளை இல்லாதொழிக்கும் செயற்பாடு என கருதலாம். ஆயினும், இந்த பூகோள யதார்த்தத்திலிருந்து எம்மால் வெளியேற முடியாது. எனவே, இந்த புதிய நிலைமைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதானது, இன்று பல்வேறு நாடுகள் எதிர்நோக்கும் பிரதான சவாலாகும். எனவே தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையானது, உலகளாவிய ரீதியில் ஒன்றிணைதல் மற்றும் ஒரே முகாமைத்துவ தொகுதியின் கீழ் இயங்குவது அத்தியவசிய காரணியாகும். தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையின் உலகளாவிய ஒன்றிணைவிற்கான, சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்துடன் (ITU - International Telecommunication Union) இணைந்து, உலகளாவிய ரீதியில் 169 நாடுகள், தங்களது தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டு வருகின்றன. இலங்கையும் அதில் அங்கத்துவம் பெறுகின்றது. அவ்வங்கத்துவத்தை, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கொண்டுள்ளது.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (Telecommunication Regulatrory Commission of Sri Lanka - TRCSL), தொலைத் தொடர்பாடல் துறையின், தேசிய ரீதியில் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமாகும் என்பதோடு, தொலைத் தொடர்புத் துறையின் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டவாறு, தொழிற்படும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் தொலைத் தொடர்பு சேவைகளை உரிய முறையிலும் செயற்திறன் மிக்கதாகவும் நடாத்திச் செல்வது தொடர்பில் செயற்பட்டு வருகின்றது. இது தவிர, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மேலும் விரிவாக்கம் செய்து, அதன் மூலம் மக்களின் பொது வாழ்க்கையை மேலோங்கச் செய்வதற்குமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழவினால் (Telecommunication Regulatrory Commission of Sri Lanka - TRCSL) மேற்கொள்ளப்படும் பணிகளின் மூலம், இலங்கையின் தொலைத் தொடர்பு துறையை உயர்தரம் கொண்டதாகவும், அது மக்கள் நலன் மிக்கதான துறையாகவும் அபிவிருத்தி செய்வது தொடர்பில், இவ்வேளையில், மக்களிடம் தகவல் தொடர்பாடலை மேற்கொள்ளும் புதிய ஊடகமாக, மும்மாத சஞ்சிகையான 'அதிர்வெண்' வெளிவருகின்றது. இது தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் துறை பற்றியும், தகவல் தொடர்பாடல் துறை பற்றியும் மக்களை அறிவூட்டும் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு எப்போதும் தயாராகவுள்ளது. விசேடமாக தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களுக்கும், அத்துறையில் தொழில் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும், அது குறித்து ஆர்வமுள்ளவர்களுக்கும் அதிர்வெண்ணின் மூலம் விளக்கமளிப்பதே எமது முயற்சியாகும். அதிர்வெண் உண்மையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியைக் கொண்ட இலங்கையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கும். தற்போது வரை, இது தவிர்ந்த பாதை எம்மிடம் இல்லை என்பதே அதற்கான காரணமாகும். அந்த முயற்சி பலன்மிக்க ஒன்றாக மாறுவதை காண்பதில், நீங்களும் அதன் பங்காளர்களாக மாற வேண்டும்.

எனவே, உங்கள் அறிவார்ந்த பங்களிப்பை, அதிர்வெண் எப்போதும் எதிர்பார்த்திருக்கின்றது. அது உங்களையும் எங்களையும் இணைக்கும் புதிய சமிக்ஞை தொகுதியாகும்.

கபில எம். கமகே - ஆசிரியர்


அதிர்வெண்

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
இல. 276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08

**ஆசியரியர் குழு**
தொலைபேசி 0112 689345 நீட்சி 4200
மலர் 01, இதழ் 01
2016 செப்டெம்பர்

**ஆலோசனை**
பீ.பி. அபயகோன்
தலைவர்
சுனில் எஸ். சிறிசேன
பணிப்பாளர் நாயகம்
சுஜான் நாணயக்கார
பிரதி பணிப்பாளர் நாயகம்

**ஆசிரியர்**
கபில எம். கமகே

**உதவி ஆசிரியர்கள்**
தமயந்தி சமரகோன்
பிரியானி ஹெட்டிஆரச்சி

**புகைப்பட கலைஞர்கள்**
பந்துல சேனாநாயக்க
ஹேமந்த ஜயசுந்தர

**மொழி பெயர்ப்பு**
றிஸ்வான் சேகு முகைதீன்

**கிரபிக் மற்றும் பக்க வடிவமைப்பு**
லேக்ஹவுஸ் விசேட வெளியீட்டு பிரிவு

**அச்சு**
லேக்ஹவுஸ் அச்சுப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு சட்டம் தொடர்பான சிறு அறிமுகம்

1991 ஆம் ஆண்டின் இலக்கம் 25 எனும், இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இலங்கையின் தொலைத் தொடர்பு துறையை, புதியதொரு ஒழுங்குமுறை தொடர்பான பாதையை நோக்கி இட்டுச் செல்லும் நிறுவனமாகும்.

தெற்காசிய வலயத்தில் முதலாவது ஒழுங்குபடுத்தும் சபையாகவும், இலங்கையில் ஒழுங்குபடுத்தல் எனும் விடயத்தை முதன் முதலில் இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய நிறுவனமாக அதனை குறிப்பிடலாம். அது, 1996 இல 27 எனும் இலங்கை தொலைத் தொடர்பு திருத்தச் சட்டத்தின் மூலம், ஒழுங்குபடுத்தல் தொடர்பான அதிகாரத்தை மேலும் அதிகரித்துக் கொண்டுள்ளது. இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு, இலங்கையிலுள்ள அரச நிறுவனங்களில், ஒழுங்குபடுத்தும் விடயத்தை மேற்கொள்ளும் விடயத்தில் முன்னணி வகிக்கும் நிறுவனமாகவும், முதலாவது ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவாகவும் தனது அதிகாரம் மற்றும் பொறுப்புகளின் மூலம் பொதுமக்களுக்கான மிகச் சிறந்த சேவையை மேற்கொள்ளும் அரசாங்க சட்ட ரீதியான நிறுவனமாகும்.

**வரலாற்றின் சில துளிகள்**

இலங்கையின் தொலைத் தொடர்புத் துறையில், தெற்காசிய வலயத்தில் மிகச் சிறப்புவாய்ந்த ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக, கையடக்க தொலைபேசி துறையில், நடமாடும் தொடர்பாடல் பற்றிய உலகளாவிய தொகுதியை (GSM) முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு எனும் வரலாற்று முக்கியத்துவத்தை பெறுகின்றது. 1988 ஆம் ஆண்டு தொலைத் தொடர்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் செல்டெல் லங்கா தனியார் நிறுவனத்திற்கு, முதன் முறையாக நடமாடும் தொலைபேசி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதை அடுத்து, திறந்த பொருளாதார முறையின் கீழ், தனியார் துறைக்கு தகவல் தொலைத் தொடர்பு துறைக்குள் நுழையும் வாய்ப்பு உருவானது. 1990 தசாப்பதம், இலங்கை தொலைத் தொடர்புத் துறையில் அழியாத இடத்தை பிடிக்கின்றது. அரச நிறுவனமாக இருந்த இலங்கை தொலைத் தொடர்பு பணிப்பாளர் காரியாலயம், இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு எனும் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவாக மாற்றப்பட்டமை, 1991 இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமான டெலிகொம் நிறுவனம், 1996 ஆம் ஆண்டு தனியார்மயப்படுத்தப்பட்டு, 35% ஆன பங்குகள் ஜப்பானின் நிபொன் டெலிகிராப் நிறுவனத்திற்கு விற்பதற்காக அரசாங்கம் எடுத்த முடிவு, வரலாற்று முக்கியத்துவம் மிக்க முன்னெடுப்பாகும். இலங்கை, தொலைத் தொடர்பு சந்தையின் திறந்த பொருளாதார கொள்கையின் மூலம் முன்னேற்றமடையும் வாயப்பை பெறும் வகையில், 1996 ஆம் ஆண்டு முதன் முறையாக கம்பியற்ற தொலைபேசி சேவைகள் இரண்டிற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கியமையும், 2003 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச தொலைத் தொடர்பாடல் சேவை வழங்குவதற்காக வெளி நுழையும் செயற்பாட்டாளர்களுக்கான (EGO - External Gateway Operator) அனுமதிப்பத்திரங்கள் 33 தொடர்பில் அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் போட்டித்தன்மை ஏற்பட்டது. இதன் மூலம் தொலைத் தொடர்பு துறையில் தேசிய, சர்வதேச அழைப்புக் கட்டணங்கள் போன்றவை குறைவடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இணையத்தளத்திற்குள் இலகுவாக நுழையும் வகையில், இணைய சேவை திட்டத்திற்கான பாதையும், இதன் மூலம் உருவானது. இவ்வாறான நிலைமைகளின் கீழ் மேலும் முன்னேற்றமடைந்த தொலைத் தொடர்பு துறையின் தொடர்ச்சியான பயணத்திற்காக, தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் முடிவுகள், இத்துறையின் வளர்ச்சிக்கு பாரிய பலமாக அமைந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**எமது தொலைநோக்கு மற்றும் சிறப்பு**

விஞ்ஞானம் மற்றும் ஒழுங்குபடுத்தல் விசேடத்துவத்தின் மூலம் முன்னேற்றமடைந்து முன்னோக்கிச் செல்லும் தொலைத் தொடர்பாடல் கைத்தொழில், உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துவோர் என அங்கீகாரத்தை பெறுவது, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தொலைநோக்கமாகும். இத்தொலைநோக்கிற்கு அமைவாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை பலம் மிக்கதாக மாற்றுதல், மக்கள் நலனை உறுதிப்படுத்தல், சந்தையில் போட்டித் தன்மையை ஏற்படுத்துதல் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. ஆணைக்குழுவின் பிரதான பொறுப்பு, இலங்கையினுள் அதிர்வெண் அல்லது அலைவரிசை கற்றையை (Spectrum) தொழிற்பாடு மிக்கதாகவும் உயர் தரம் மிக்கதாகவும் முகாமைத்துவம் செய்வதாகும். விசேடமாக, மிகக் குறைவானதும், அவதானமாக பயன்படுத்த வேண்டியதுமான வளங்களான அலைக்கற்றை, குறிமுறை, வானவெளி வெற்றிடம், உள்நாட்டு தொடர்பு, சர்வதேச தொடர்பு மத்தியநிலையத்திற்குள் பிரவேசித்தல், பிரதான தேசிய வலையமைப்பிற்குள் பிரவேசித்தல், சட்ட ரீதியான அனுமதியை வழங்குதல் போன்ற வரையறுக்கப்பட்ட வளங்களை, மிகப் பொறுப்புடன் ஒழுங்குபடுத்துவது, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு பொறுப்பான விடயங்களாகும்.

**ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புகள்**

சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் அனுமதிப்பத்திர செயற்பாட்டாளர்களின் அனுமதிப்பத்திர விதிகளுக்கு அதிகாரமளித்தல்.

அனுமதிப்பத்திர செயற்பாட்டாளர்களுக்கிடையில் நியாயமான மற்றும் உறுதியான போட்டித் தன்மையை பேணுவதற்காக ஊக்குவித்தல்.

பாவனையாளருக்கு நியாயமான விலைக்கு உத்தரவாதம் வழங்குதல்.

பாவனையாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

உலகளாவிய பிரவேச சேவை அல்லது சேவைகள் கிராமிய மக்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் விசேட தேவை கொண்டவர்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் பொறுப்பாக இருத்தல்.

அவசர நிலைமைகளுக்கு தயாராக இருத்தல்.

குறைந்த வசிதிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒழுங்குபடுத்துதல்.

உயர்தரமான தொலைத் தொடர்பாடல் சேவையை, பாவனையாளரின் தேவைக்கு ஏற்றதாக அமையும் வகையில், ஈடுகொடுக்கும் வகையிலும் நியாயமாக முறையில் வழங்குதல்.

நல்லாட்சியை நடைமுறைப்படுத்தல்.

சிவில் சமூகம், நவீன தகவல் மற்றும் தொழில்நுட்பத்தை பெற்று, சிறந்த அறிவைப் பெற்ற சமூகமாக முன்னேற்றமடைவதற்கு உதவுதல்.

சர்வதேச தரத்திற்கு அமைய தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பில் செயற்படுதல்.

**அனுமதிப்பத்திர ஒழுங்குபடுத்தல்**

இலங்கை தொலைத் தொடர்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவிற்கு அமைய, இலங்கையில் தொலைத் தொடர்பு முறைமை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு, செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய வேண்டும். அது போன்று வானொலி அலைவரிசை அல்லது வானொலி அதிர்வெண்ணை கதிர்க்கும் உபகரணத்தை பயன்படுத்துவதற்காக, சட்டத்தின் 22 ஆவது பிரிவின் கீழ் அலைவரிசை அனுமதிப்பத்திரத்தை கொள்வனவு செய்ய வேண்டும். இலங்கையினுள், தொலைத் தொடர்பு உபகரணங்களின் இறக்குமதி, விற்பனை, கைமாற்றுதல், வாடகைக்கு வழங்குதல், குத்தகைக்கு வழங்குதல், செயற்படுத்தி காண்பித்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் போன்றவை தொடர்பில் சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ் சந்தை அனுமதிப்பத்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய வேண்டும். இலங்கையில் தொலைத் தொடர்பு முறைமைகளை பயன்படுத்துவோரும், வியாபார ரீதியில் அதில் ஈடுபடுவோரும், இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதிப்பத்திரத்தை பெற்று, சட்ட ரீதியான சூழலின் கீழ் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில், அது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான முழு அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு உண்டு.

**அலைவரிசை முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப தரப்படுத்தல்**

விசேடமாக ஆணைக்குழு, வலையமைப்பு உபகரணங்கள் மற்றும் துணைச் சாதனங்கள் தொடர்பில் மாதிரி அனுமதியை வழங்குதல் மற்றும் சுங்கத்தின் வழியாக பொருட்களை விடுவித்தல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்கும். இது தொடர்பில் புதிய தொழில்நுட்ப முறைகளின் ஊடாக வாடிக்கையாளர், இணையத்தின் ஊடாக தொடர்பை ஏற்படுத்தும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. வானொலி மற்றும் தொலைத் தொடர்பு தொடர்பான துணைச் சாதனங்கள் (RTTE) தொடர்பில் மாதிரி அனுமதியையும் ஆணைக்குழு வழங்குகின்றது. அதுபோன்று வானொலி ஒலிபரப்பு தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பில் தொழில்நுட்ப சான்றிதழை உறுதிப்படுத்துதல், வானொலி அலைவரிசை பயன்பாட்டை திட்டமிடல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல், கட்டுப்படுத்தும் விதி, தொழில்நுட்ப தரத்தை உறுதிப்படுத்தல், வானொலி அலைவரிசை கற்றையை வெளியிடல், நியாயமான முறையில் அலைவரிசைகளை பிரித்தல் போன்ற நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மை மிக்க வகையில் மேற்கொள்ளும். தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 5 (ஓ) வின் அடிப்படையில் கட்டணம் அறவிடும் முறைக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் ஆணைக்குழுவிடமே காணப்படுகின்றது.

**பாவனையாளர் முறைப்பாடு விசாரணை**

தகவல் தொடர்பாடல் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் அடிப்படையில், பாவனையாளர் முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிடம் உண்டு. முறைப்பாட்டாளரின் முறைப்பாடு நியாயமானது என அறியும் சந்தர்ப்பத்தில், உரிய தரப்பிற்கு இழப்பீடு வழங்குமாறு, தொலைபேசி நிறுவனங்களுக்கு உத்தரவிடுவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு. அவ்வாறே தொலைத் தொடர்பாடல் துறையில் காலத்திற்குக் காலம் தோன்றும் பிரச்சினைகள் தொடர்பில் பகிரங்கமாக விசாரணைகளை மேற்கொண்டு, மக்கள் பங்குகொள்ளலை ஊக்குவிக்கவும், உரிய முடிவுகள், உத்தரவை வழங்குவதற்கு தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

தேசிய பாதுகாப்பு, மக்கள் நலன் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றதும், இலங்கை பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் மிகச் சிறந்த பணியை நிறைவேற்றும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, தொடர்ந்து வரும் சவால்கள் தொடர்பில் புதிய தீர்வுகளை தேடுவதில், தகவல் தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையின் முன்னோடியாக திகழுகின்றது.

அசங்கா பெபிலகோன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சட்ட பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மேலும் பரவ நாம் செல்வாக்குச் செலுத்துவோம்

## பணிப்பாளர் நாயகம் சுனில் எஸ். சிறிசேன



இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அல்லது TRCSL எனும் நிறுவனம், 1991 இலக்கம் 25 எனும் இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டம் மற்றும் பின்னர் திருத்தியமைக்கப்பட்ட 1996 இலக்கம் 27 எனும் இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் அரசாங்க அரசியலமைப்புக்கு அமைவான சபையாக நிறுவப்பட்டுள்ளது. தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு முன்னர், தொலைத் தொடர்பு பணிப்பாளர் அலுவலகம் எனும் பெயரில் அழைக்கப்பட்டு வந்தது.

இந்த ஆணைக்குழு, தொலைத் தொடர்பு சேவைகளை வழங்குவதில்லை என்பதோடு, தொலைத் தொடர்பு துறையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, தொழிற்படும் நிறுவனத்தால் வழங்கப்படும் தொலைத் தொடர்பு சேவைகளை முறையாகவும் செயற்றிறன் மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். **தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தற்போதைய பணிகள் யாது, எதிர்கால திட்டங்கள் எவை?**

போன்றவை தொடர்பில், அதன் பணிப்பாளரான சுனில் எஸ். சிறிசேன அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் செயற்பாடு என்ன?**

பிரதானமாக, இலங்கைக்கு உரித்தான வகையில் செயற்படும் மின்காந்த அலைவரிசைகளை, செயற்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் வழங்குனர், பாவனையாளர் ஆகிய இரு துறைகளையும் உரிய முறையில் வழிநடாத்துவதே, இதன் அடிப்படை செயற்பாடாகும். எவ்வாறெனில், ஒரு நாட்டின் பூகோள சூழலுக்கு உரித்தான மின்காந்த அலைகளை (Spectrum) உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய வேண்டும். விசேடமாக நாமும் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தினாலேயே (ITU) இந்த மின்காந்த அலைகள் உரிய முறையில், ஒவ்வொரு நாட்டிற்குமாக ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய எமக்கு உரித்தான மின்காந்த அலைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதே எமது பிரதான பொறுப்பாகும். அது தவிர, தேசிய மற்றும் சர்வதேச தொலைபேசி சேவைகளை செயற்றிறன் மிக்கதாக செயற்படுத்துதல், தொலைத் தொடர்பு செயற்பாட்டாளர்கள் தொடர்பில் நீதியான, விரைவான, பலன்மிக்க மற்றும் வெளிப்படையான முடிவுகளை முன்வைத்தல், இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் நம்பிக்கைக்குரிய சேவை நிலைமையின் கீழ் தொலைத் தொடர்பு வலையமைப்பை உரிய முறையில் செயற்படும் வகையில் அவற்றை கண்காணித்தல், சந்தைக்கான பலத்தை செயற்படுத்தல், அதன் மூலம் வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்கு அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளை தயாரித்தல் மற்றும் பெறப்படும் தகவல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், பல்வேறு தொலைபேசி சேவை வழங்குதல், கட்டண சேவை நிலைகள் மற்றும் கொள்வனவு செய்தல் தொடர்பில் வாடிக்கையாளரை தெளிவூட்டுதல் மற்றும அவர்களை பாதுகாத்தல், தொலைத் தொடர்பு துறையிலுள்ளவர்களின் சந்தை போட்டியை உரிய முறையில் மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுத்தல், இந்தத் துறைக்கு உரித்தான புதிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் ஆர்வமூட்டல், தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்கள் புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்படுகின்றனரா என அவதானித்தல் போன்ற பிரதான விடயங்கள் போன்றன தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும்.

**தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, சர்வதேச தொலைத் தொடர்பு சங்கத்தின் உறுப்புரிமையை ஏன் பெற வேண்டும்?**

சர்வதேச தொலைத் தொடர்பு சங்கமே (ITU) இத்துறைக்கு உரித்தான சர்வதேச விதிமுறைகளை விதிக்கின்றது. இதனால் எந்தவொரு நாடும் இதன் அங்கத்துவத்தை பெற வேண்டும். தற்போது வரை உலகின் 197 நாடுகள், இவ்வங்கத்துவத்தை பெற்றுள்ளன. விசேடமாக மின்காந்த அலைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் விசேடமாக இந்த சங்கத்தினாலேயே, உலகம் 3 வலயங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வலயத்திற்குமான மின்காந்த அலை பட்டை பிரித்துக் கொடுக்கப்படும்.

நாம் மூன்றாவது வலயத்திற்குள் அடங்குவதால், அந்த இடைவெளிக்குள் அடங்கும் விடயங்கள் யாவும் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அவசியமான நிலைமைகளை அவர்கள் சிபாரிசு செய்வார்கள். நாம் அதற்கமையவே முகாமைத்துவம் மற்றம் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். உதாரணமாக எமக்கு உரித்தான் FM அலைவரிசையானது 87 முதல் 108 வரையாகும். அலைவரிசைகளை ஒதுக்கும்போது ஒன்றுக்கொன்று பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், இந்த அலைவரிசைகளை முகாமைத்துவம் செய்வதற்கு அவசியமான சர்வதேச தொலைத் தொடர்பு சங்கத்தின் சிபாரிசுகளுக்கமையவே, நாம் இலங்கையில் இந்த அலைவரிசைகளை முகாமைத்துவம் செய்கின்றோம். அது மாத்திரமன்றி, கையடக்க தொலைபேசிகள், உடலுக்கு தீங்குவிளைவிக்காத வகையில் தயாரிப்பதற்கு வேண்டிய, சர்வதேச சிபாரிசுகள் கூட இந்த சங்கத்தினாலேயே வழங்கப்படுகின்றது. அந்த சிபாரிசுகளுக்கு அமையவே, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிடம், இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் தொலைபேசிகளை பதிவு செய்யப்படுவதற்கான அவசியம் ஏற்படுகின்றது. அவ்வாறு மேற்கொள்ளப்படாத தொலைபேசிகள், அத்தரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டனவா என, சரியாக கூற முடியாது என்பதால், இவ்வாறு பதிவு செய்யப்படும் உபகரணங்களை கொள்வனவு செய்யுமாறு, பாவனையாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது, சாதாரண மக்களுடன் எவ்வாறு தொடர்புறுகின்றது?**

எம்மிடம் வாடிக்கையாளர் பாதுகாப்பு பிரிவு எனும் பிரிவொன்று காணப்படுகின்றது. வாடிக்கையாளருடன் அப்பிரிவு பல்வேறு வகையில் தொடர்புபடுகின்றது. அதில் ஒன்றுதான், தனது தொலைபேசி பட்டியல் அசாதாரணமான வகையில் அதிகரித்துள்ளது என சந்தேகம் ஏற்பட்டு, குறித்த தொலைபேசி சேவை நிறுவனத்திற்குச் சென்று உரிய நியாயமான பதில் கிடைக்காவிடின், குறித்த வாடிக்கையாளர் இந்த ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குறித்த நிறுவனத்திடமிருந்து விரிவான விலைப்பட்டியல் தகவல் பெறப்பட்டு, அந்த முறைப்பாட்டை ஆராய்ந்து, தவறு இடம்பெற்றிருக்குமாயின் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று தொலைபேசி சேவையில் இடையூறு காணப்படுமாயின், அது 3 நாட்களுக்குள் சீர் செய்யப்பட வேண்டும். அவ்வாறு சீர் செய்யப்படாதவிடத்து, அது தொடர்பில் ஆணைக்குழுவின் உதவியை பெறுவதற்கு பாவனையாளரால் முடியும். இதன்போது பாவனையாளருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை செலுத்துமாறு, உரிய தொலைபேசி நிறுவனத்திற்கு உத்தரவிடுவதற்கு எம்மால் முடியும். உரிய வாடிக்கையாளருக்கு அந்நிறுவனம் பணத்தை செலுத்த வேண்டும்.

அது போன்று கையடக்கத் தொலைபேசி ஒன்று காணாமல் போயிருப்பின் அல்லது களவாடப்பட்டிருப்பின், பொலிஸ் முறைப்பாட்டு பிரதியுடன், உரிய இமி இலக்கத்தை குறிப்பிட்டு, எமக்கு முறைப்பாடு செய்ய முடியும். இதன்போது, இலங்கையில் செயற்படும் 5 தொலைபேசி வலையமைப்புகளுக்கும் நாம் அந்த இமி இலக்கத்தை வழங்குவோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது அந்த தொலைபேசியில் சிம் அட்டை இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அது உரிய தொலைபேசி வலையமைப்பின் தொழில்நுட்ப முறைமையின் மூலம் அறியப்படும். அதன் அடிப்படையில் களவாடப்பட்ட தொலைபேசி காணப்படுகின்ற இடம் மற்றும் அதனை பயன்படுத்துபவர் தொடர்பான தகவலை அறிய முடியும். அதன் பின்னர் அவரை பொலிஸ ாரால் கைது செய்ய முடியும். ஆயினும், இம்முறையின் மூலம் தொலைபேசியை கண்டுபிடிப்பதற்கு, குறித்த தொலைபேசியில் சிம் அட்டை இணைக்கப்பட்டு அது பயன்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது களவாடப்படும்



செய்யப்படுகின்றன. அல்லது வெளிநாடு செல்வோருக்கு அவை விற்பனை செய்யப்படுகின்றது. இதன்போது தொலைபேசியை கண்டுபிடிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்த ஆணைக்குழு, தகவல் தொழில்நுட்ப துறைக்கு வழங்கும் பங்களிப்பு யாது?**

தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் கற்றுக்கொள்வதற்கு, வெளியில் பாரிய ஆர்வம் மற்றும் கேள்வி காணப்படுகின்றன. ஆயினும் இக்கற்கைகளன் மூலம் வெளிவருகின்ற மனித வளத்தை நாம் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பிலேயே தற்போது சிக்கல்கள் காணப்படுகின்றன. அதற்காக நாம் தற்போது செய்ய வேண்டியது, அது தொடர்பிலான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதாகும். அதற்காக நாம் இத்துறையை மேலும் முன்னேற்றமடையச் செய்கின்றோம். அது தொடர்பில் எமது பங்களிப்பும் காணப்படுகின்றது. உதாரணமாக, உலகளாவிய ரீதியில் இத்துறைக்குள் பெண்கள் நுழைவது குறைவாகக் காணப்படுகின்றது.

ஆயினும் உலகம் முழுவதிலும் இத்துறையில் பெண்களுக்கான இடம் காணப்படுகின்றது. எனவே பெண்களுக்கு இத்துறை குறித்தான ஆர்வத்தை

ஏற்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். சிறிய மற்றும் மத்திய பரிமாண வியாபாரத் துறையில், தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்பில் அறிவை வழங்குதல் தொடர்பான நிகழ்ச்சிகளை நாம் நடைமுறைப்படுத்துகின்றோம். உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளின் அபிவிருத்தியின் அடித்தளம் தங்கியிருப்பது, சிறிய மற்றும் மத்திய பரிமாண கைத்தொழில்களிலாகும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை (ITC) பயன்படுத்துவதன் மூலம் அதனை மேலும் வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியும். இதனால், இந்நடவடிக்கைகளின் மூலம் சிறிய மற்றும் மத்திய பரிமாண வர்த்தகர்களை வலுவூட்ட முடியும். அவ்வாறில்லையெனில், இன்றைய நிலையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமாகும். தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம், மிகக் குறைந்த செலவில், தமக்குத் தேவையான தகவல்களை பெறுவதற்கும், விற்பனை, சந்தைப்படுத்தலை மேற்கொள்ளவும் முடியும். எனவேதான் நாம் இத்துறையை விருத்தி செய்கின்றோம். அடுத்ததாக, தகவல் தொழில்நுட்பத்தை ஆசிரியர்களின் ஊடாக, அவர்களை பயிற்றுவித்து, தகவல் தொழில்நுட்பத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கான வழியை உருவாக்குகின்றோம். அது போன்று பல்வேறு தொடர்பாடல்கள் பயன்படுத்தப்படும் துறைகளிலுள்ளவர்களை பயிற்றுவிக்கின்றோம். மீனவர்களுக்கு அவசியமான GPS தொடர்பாடல் தேவையை வழங்குகின்றோம். அது போன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குகின்றோம். விசேடமாக கையடக்க தொலைபேசியின் வழியாக இடம்பெறும் குற்றங்கள் தொடர்பில், பிரதேச செயலக காரியாலயத்தின் ஊடாக கிராம சேவை மட்டம் வரை இப்பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

கலந்துரையாடல்
கபில எம். கமகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# வணக்கம்

# ஒரு நிமிடம் தாருங்கள்

தகவல் மற்றும் தொழில்நுட்ப விருத்தியுடன் கையடக்க தொலைபேசி தொடர்பாடலும் மிக வேகமாக அபிவிருத்தியடைந்துள்ளது. இலங்கையிளுள்ள கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களின் எண்ணிக்கையை கருதும்போது, அது இலங்கையின் சனத்தொகையிலும் பார்க்க அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலையில், கையடக்கத் தொலைபேசியானது மக்களின் அத்தியவசிய அங்கமாக மாறிவிட்டது. மக்கள் தங்களுக்கு அவசியமான அன்றாட செய்திகள் குறித்து அறிந்துகொள்ளவும், தமது கடமைகளுக்கு உரித்தான தொடர்பாடல் நடவடிக்கைகள், தனிப்பட்ட தொடர்பாடல் நடவடிக்கைகள், இணையத்தை பயன்படுத்தி புதியவற்றை அறிந்துகொள்ளல் மற்றும் பொழுதுபோக்கை பெற்றுக்கொள்ளல் போன்றவற்றிற்காக, கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

இலங்கையில், ஐந்து கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குனர்களால் கையடக்க தொலைபேசி சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

1. டயலொக் டெலிகொம் தனியார் நிறுவனம்.
2. எடிசலாட் தனியார் நிறுவனம்.
3. மொபிடெல் தனியார் நிறுவனம்.
5. பாரதி எயார்டெல் தனியார் நிறுவனம் என்பன அவையாகும்.


மேற்குறிப்பிட்ட ஐந்து நிறுவனங்களின் ஊடாக, இலங்கையிலுள்ள மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்கள், தங்களது தொலைபேசித் தேவையை ஈடுசெய்து வருகின்றனர். ஆயினும், குறித்த கையடக்கத் தொலைபேசி வழங்குனரால் வழங்கப்படும் சேவையின் தரம் குறித்தான உரிய அறிவு அல்லது சேவையின் நிலை குறித்தான தெளிவு குறித்தான அறிவை மிகக் குறைந்த அளவிலானோரே கொண்டுள்ளனர். வாடிக்கையாளர்களுக்கு தங்களது சேவை குறித்தான விடயங்களை அறிந்துகொள்ள, ஒவ்வொரு நிறுவனமும் ஒரு குறுந்தொலைபேசி இலக்கத்தை கொண்டுள்ளது. அவையாவன

1. டயலொக் டெலிகொம் தனியார் நிறுவனம் - 1777
2. எடிசலாட் தனியார் நிறுவனம் - 1727
3. மொபிடெல் தனியார் நிறுவனம் 1788
5. பாரதி எயார்டெல் தனியார் நிறுவனம் - 1755

வாடிக்கையாளர்களால், இந்த இலக்கங்களுக்கு மேற்கொள்ளப்படும் அழைப்புகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர், வாடிக்கையாளர் தான் விரும்பிய மொழியைத் தெரிவு செய்து, தனக்கு அவசியமான சேவை குறித்தான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த அழைப்புகள், முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு எனும் ரீதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கு மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கான கட்டணங்கள் தொடர்பில், ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு முறைகளைக் கையாண்டு வருகின்றது. ஒரு தொலைபேசி நிறுவனம், கட்டணம் இன்றிய மூன்று தொலைபேசி அழைப்புகளையும், மற்றொரு நிறுவனம் இரண்டு அழைப்புகளையும் வழங்குவதோடு இன்னுமொரு நிறுவனம் கட்டணமின்றிய எவ்வித அழைப்புகளையும் வழங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கட்டணம் செலுத்தியோ, செலுத்தாமலோ வாடிக்கையாளர் சேவை முகவர்களை தொடர்புகொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு, தமது கேள்விக்கான விடையை அறிந்துகொள்ள, அதிகளவான நேரம் அழைப்பில் காத்திருக்க வேண்டியுள்ளமை தொடர்பில் அதிகளவான பதிவுகள் காணப்படுகின்றன. அது சில வேளைகளில், 30 நிமிடங்களை அண்மித்ததாக காணப்படும். இது வாடிக்கையாளர் எதிர்கொள்ளும் மிக பாரிய பிரச்சினையாகும்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கான பிரதான காரணம், வாடிக்கையாளர் சேவை நிலையங்களில் கடமையாற்றுபவர்களாக, பாடசாலை கல்வியை நிறைவு செய்து வெளியேறிய இளைஞர், யுவதிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பது மற்றும் அவர்கள் புதிய நிறுவனங்களில் இணைவது, உயர் கல்வியைத் தொடர்வது போன்றவற்றால், இக்கடமைகளிலிருந்து விலகிச் செல்வதால் ஏற்படும், பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவடைவது போன்றவையாகும்.

தேவையற்ற வகையில் பல்வேறு அழைப்புகளை மேற்கொள்ளுதல், ஒவ்வொரு வாடிக்கையாளரும் முன்வைக்கும் பிரச்சினைகள் பரந்துபட்டு காணப்படுவதால், விரிவான தகவல்களை கோரும் வாடிக்கையாளருக்கு அதிகளவான நேரத்தை ஒதுக்க நேரிடுவதனாலும் தங்களது நிறுவனத்தால், மிகக் குறைந்தளவான நேரத்தில் உயர்ந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல் போன்றனவும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள், தங்களது சேவைகள் குறித்து பல்வேறு கருத்துகளைத் தெரிவித்த போதிலும், ஒரு வாடிக்கையாளருக்கு உத்தியோகத்தர் ஒருவரின் உதவி அவசியமாகின்ற சந்தர்ப்பத்தில், குறைந்தளவான நேரத்தில் உயர்ந்த சேவையை வழங்கி அவரது தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என ஆலோசனை வழங்குவதும், அந்த ஆலோசனைக்கு அமைய குறித்த கையடக்கத் தொலைபேசி நிறுவனம் செயற்படுகின்றதா என்பதை கண்காணிப்பதும், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான கடமையாகும்.

அது தொடர்பில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கூற்றுநிலை பிரிவினால் (Modularity) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சில வழிகாட்டல்களின் கீழ், வாடிக்கையாளர் தொடர்பு நிலையங்களின் நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படும். அதில் முதலாவதாக, வாடிக்கையாளர் தொடர்பு மத்தியநிலையத்திற்கு கிடைக்கும் அழைப்புகளில், வாடிக்கையாளர் தொடர்பு அதிகாரியின் உதவி கோரப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வாறு கோரப்படும் சந்தர்ப்பம் முதல் அந்த அழைப்புக்கு, உரிய அதிகாரி ஒருவரால் பதில் வழங்கப்படும் சந்தரப்பம் வரை எடுத்துக் கொள்ளப்படும் நேரம் தொடர்பிலான பட்டியல். அதாவது, வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய எண்களை உள்ளீடு செய்த பின்னர், “வாடிக்கையாளர் முகவர் ஒருவர் தொடர்பு கொள்ளும் வரை அழைப்பில் காத்திருங்கள்” எனும் அறிவுறுத்தல் கிடைத்தது முதல், பதில் கிடைக்கும் வரை எடுத்துக் கொள்ளப்படும் நேரமாகும். அது பின்வருமாறு அமையும்,

- 40 செக்கன்களிலும் குறைந்த நேரம் எடுத்துக்கொள்வது 60% இலும் அதிகமாக இருக்க வேண்டும்.
- 80 செக்களுக்குள் பதில் வழங்கப்படுவது, 85% ஆக இருக்க வேண்டும்.

இவற்றிற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களின் கட்டணப் பட்டியல் தொடர்பிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக எடுக்கும் நேரம் தொடர்பிலான பட்டியலும் காணப்படுகின்றது. முறைப்பாட்டை மேற்கொண்ட வாடிக்கையாளர், திருப்தி அல்லது உடன்பாட்டுக்கு வரும் வகையிலான தீர்வை பெற்றுக் கொள்வதற்கு கிடைக்கும் நேரமாகும்.

- பிற்கொடுப்பனவு பொதியாயின், 3 மாதங்களுக்குள் 90% - 95% தீர்வு வழங்கப்படுதல்
- பிற்கொடுப்பனவு பொதியாயின், 6 மாதங்களுக்குள் 95% - 100% தீர்வு வழங்கப்படுதல்
- முற்கொடுப்பனவு பொதியாயின், 3 நாட்களுக்குள் 85% தீர்வு வழங்கப்படுதல்
- முற்கொடுப்பனவு பொதியாயின், 5 நாட்களுக்குள் 100% தீர்வு வழங்கப்படுதல்

விசேடமாக முற்கொடுப்பனவு பொதிகளில் ஏற்படும் பிரச்சினைகளாக, அட்டைகள் அல்லது ரீலோட் இனை சேர்க்கும்போது ஏற்படும் பிரச்சினைகளை குறிப்பிட முடியும். அவ்வாறே,

- பிற்கொடுப்பனவு பொதிகளின், கட்டண பட்டியல் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை, மாதமொன்றில் 0.5% இலும் குறைவாகவும்.
- முற்கொடுப்பனவு பொதிகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை, மாதமொன்றில் 0.1% இலும் குறைவாகவும் இருக்கும் வகையில் பேணப்பட வேண்டும்.

இவற்றிற்கு மேலதிகமாக, பிற்கொடுப்பனவு பொதிகளுக்கான கட்டண பட்டியல் கிடைத்தல் அல்லாது கிடைக்காதிருத்தல் தொடர்பான பிரச்சினைகளின் எண்ணிக்கை வீதமும் கருத்திற்கொள்ளப்படும்.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தொடர்ச்சியாக தனது கவனத்தையும் விசாரணைகளையும் மேற்கொண்டவாறு, கையடக்க தொலைபேசி நிறுவனங்களின் வாடிக்கையாளர் சேவை மத்திய நிலையங்களால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கு அவசியமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கங்கா சஞ்ஜீவனி ராஜபக்ஷ
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பதில் வழங்கல் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலங்கை தொலைபேசி துறையின் வரலாற்று ஒலிபரப்பு

இலங்கை தொலைபேசி கைத்தொழில் துறை 130 வருடத்திற்கும் மேற்பட்ட அதிக வரலாற்றைக் கொண்டுள்ளதோடு, தற்போது அது, நாட்டின் பிரதான கைத்தொழிலாக மாறியுள்ளது. இலங்கைக்கு தொலைபேசி சேவை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது, ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சிக் காலத்திலாகும். தொலைபேசி துறையின் வரலாற்று ஒலிபரப்பை, பிரதான மூன்று காலங்களின் கீழ் குறிப்பிடலாம். அதன் அடிப்படையில், இலங்கையில் தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் காலனித்துவ காலத்தில் தொலைபேசி சேவை இருந்த நிலை முதலாவது யுகமாகும்.

இரண்டாவது யுகமாக, சுதந்திரத்தின் பின்னல் தொலைபேசி சேவையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தொலைபேசி சேவைகள் இலங்கையில் மீள்கட்டமைப்புக்குள்ளாக்கப்பட்ட ஆரம்ப காலத்தை குறிப்பிடலாம். மூன்றாவது யுகம், கையடக்கத் தொலைபேசி சேவை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் நிலையான தொலைபேசி சேவையில் காணப்பட்ட அரச ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்த காலமாகும்.

**முதலாவது யுகம் (1880 - 1947)**

தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்படும் முன், 1858 ஆம் ஆண்டு முதல் டெலிகிராப் (Telegraph) சேவையே, தொடர்பாடல் சேவையாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன்படி, கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பிரதான நகரங்களை அண்டியதாக டெலிகிராப் (தந்தி) சேவை இடம்பெற்று வந்தது. மேலும் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச டெலிகிராப் சேவை, மன்னாரிலிருந்து இந்தியாவின் ராமேஸ்வரம் வரை பாக்கு நீரிணை வழியாக இடம்பெற்று வந்தது.

இலங்கையில் முதன் முதலில் தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டது, 1880 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியில், ஓரியன்டல் தொலைபேசி நிறுவனம் (Oriental Telephone Company) எனும் பிரித்தானிய தனியார் நிறுவனத்தால் ஆகும். கொழும்பிலுள்ள அரசாங்க நிறுவனம் மற்றும் மலையகத்திலிருந்த தோட்ட கைத்தொழிலை (Plantation Industry) மையமாகக் கொண்ட காரியாலயங்களுக்கிடையில் தொடர்பாடல் வசதியை பெறுவதே, அத்தொலைபேசி சேவை ஆரம்பமாவதற்கான அடிப்படை காரணமாக இருந்தது. அந்த வகையில், இந்த தொலைபேசி மற்றும் தந்தி சேவையானது, காலனித்துவ அரசாங்கத்தின் அரச தபால் மற்றும் தொலைத் தொடர்பாடல் திணைக்களத்தால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது, நாடு தழுவிய ரீதியில் விரிவாக்கமடைந்த தபால் சேவை காணப்பட்டதோடு அதன் மூலம், தபால் சேவை, தந்திச் சேவை, பண பரிமாற்ற சேவை மற்றும் சேமிப்பு சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. தொலைபேசி சேவையானது, தபால் மற்றும் தொலைத் தொடர்பாடல் திணைக்களத்தால் தனியான பிரிவாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அப்போதைய பிரித்தானிய அரசு, இலங்கையில் தொலைபேசி சேவையை விஸ்தரிப்பது தொடர்பில் அதிக முதலீட்டை மேற்கொள்ள முன்வரவில்லை. மேலே குறிப்பிட்டது போன்று, அரச காரியாலயம் மற்றும் தோட்ட காரியாலயங்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதே தொலைபேசி சேவை அறிமுகப்படுத்துவற்கான அடிப்படையாக அமைந்திருந்தமை அதற்கு காரணமாகும். அதற்கமைய அப்போதிருந்த, தலைநகரை அண்மித்தும் தோட்ட கைத்தொழில் இடம்பெற்று வந்த மலையக பிரதேசங்களை அண்மித்தும், தொலைபேசி வசதிகள் காணப்பட்டபோதிலும், அது அடிப்படை வசதியாக நாடு முழுவதிலும் இடம்பெறவில்லை. மிகக் குறைந்த காலத்தில் அதாவது 1896 இல், காலனித்துவ அரசாங்கத்தினால் ஓரியன்டல் தொலைபேசி நிறுவனத்திடம் இருந்த இலங்கையின் தொலைபேசி சேவை அரச ஏகாதிபத்தியத்திற்குள்ளாக்கப்பட்டமை இங்கு இடம்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும் என்பதோடு, அதனை தொலைபேசி துறையின் அரச ஏகாதிபத்திய ஆரம்ப காலமாக குறிப்பிடலாம். இந்த அரச ஏகாதிபத்திய நிலை, சுதந்திர இலங்கையில் தொலைபேசி துறை தனியார் மயப்படுத்தல் மற்றும் மீள கட்டமைக்கப்படும் வரை காணப்பட்டதோடு அதனை, இரண்டாவது யுகமாக குறிப்பிடலாம்.



இந்திக பிரபாத்
அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உங்கள் பெயரிலுள்ள சிம் அட்டைகள் எத்தனை?

# அதன் பயன்பாடு தொடர்பில் நீங்களே பொறுப்பு



உங்களுக்கு தொலைபேசி சேவையை வழங்கும் உங்கள் தொலைபேசி நிறுவனம், தனது வலையமைப்பை விரிவாக்கம் செய்திருப்பது, பெரும்பாலானோருக்கு தொடர்பாடலின் இனிமையான அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்கான வசதியை வழங்குவதற்காகவாகும். அவ்வாறான அனுபவத்தை பெறும் பாக்கியசாலிகளான நீங்கள், இன்றளவில் ஒரு சில நொடிகளில் உலகம் முழுவதிலும் உலாவும் அற்புதமான அனுபவத்தை பெறும் அதிர்ஷ்டசாலிகளாவீர்.

இவ்வாறான அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் செய்ய வேண்டிய முதலாவது விடயம், அவ்வுரிய தொலைபேசி நிறுவனத்தின் வாடிக்கையாளராவதாகும். அவ்வாறானதொரு வாடிக்கையாளராக ஆவதற்கு, நீங்கள் முதலில் செய்ய வேண்டியது, உங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதாகும். உங்கள் அடையாளத்தை உலகிற்கு உறுதிப்படுத்துவது உங்களது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டாகும். இந்த தொலைபேசி இணைப்பின் மூலம், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான எல்லைக்குள் நீங்கள் எப்போதும் செயற்பட வேண்டும்.

ஏதேனுமொரு காரணத்தால் உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை பயன்படுத்தி, மற்றுமொருவரால் தொலைபேசி இணைப்பொன்று பெறப்படும் நிலையில் ஏற்படும் விளைவு என்ன? ஆம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நீங்கள் அது பற்றி பொறுப்புக் கூறவேண்டிய ஒருவராக கருதப்படுவீர்.

நீங்கள் அறிந்தோ, அறியாமலோ உங்களது அடையாளத்தை (அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு) முன்வைத்து பெற்றுக்கொள்ளும் தொலைபேசி இணைப்பை, யாரேனும் ஒருவர் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவாராயின், நீங்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். அவ்வாறான சந்தரப்பம் ஏற்படாதிருக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உங்களது அடையாள அட்டை அல்லது அதன் பிரதியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சந்தேகத்திற்கிடமான நபர்களின் கைகளில் கிடைக்காத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்கள் கடமையாகும்.

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில், உங்கள் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்று பெறப்படும் நிலையில் தவறுதலாகவோ, உரிய முறையில் அல்லாது பிரதி எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வாறான ஆவணங்கள் கூட மூன்றாம் நபர் ஒருவரின் கைகளில் கிடைத்து, முறையற்ற பயன்பாட்டிற்குள்ளாகலாம். எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில், உங்களது அடையாள அட்டை எத்தனை தடவைகள் பிரதி எடுக்கப்பட்டன என்பது குறித்து, நீங்கள் தொடர்ந்தும் அவதானமாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உங்களது அடையாள அட்டையின் பிரதி ஒன்று, மற்றுமொருவருக்கு கிடைக்காத வகையில் அவதானமாக இருக்க வேண்டும்.

அதே போன்று உங்கள் பணப்பை காணாமல் போகும் நிலையில், உங்களது அடையாள அட்டையும் காணாமல் போகலாம். ஆயினும் ஒரு சில தினங்களில் உங்களது அடையாள அட்டை, உங்களது விலாசத்திற்கு தபால் மூலம் கிடைக்குமாயின் அது ஆறுதலான விடயமாகும். ஆனால் இதன்போது, உங்களது காணாமல் போன அடையாள அட்டையைப் பயன்படுத்தி யாரேனுமொருவர் தொலைபேசி இணைப்பொன்றை பெற்றுள்ளாரா என்பது குறித்து நீங்கள் பரீட்சிக்க வேண்டும்.

ஒரு சில வேளைகளில் விடுதிகளில் தங்குவதற்கு நேரிடும்போது, அங்கிருந்து செல்லும் வரை உங்களது அடையாள அட்டையை அவர்களிடம் ஒப்படைக்க நேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில், அங்கிருந்து செல்லும்போது மறக்காது உங்கள் அடையாள அட்டையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும். அதேபோன்று நீங்கள் அயர்ந்து விடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அது முறையற்ற வகையில் பயன்படுத்தப்படும் ஆபத்து காணப்படுவதால் அவ்வாறான விடயம் ஏற்படும் நிலையில் அதன் மூலம் ஏற்படும் விளைவுகளுக்கும் நீங்கள் பொறுப்புக் கூற வேண்டியவராவீர்கள்.

உரிமையாளரின் அனுமதியின்றி, அடையாள அட்டையை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட தொலைபேசி இணைப்புகள் தொடர்பில் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எமது அனுபவத்திற்கு ஏற்ப, இவ்வாறான தொலைபேசி இணைப்புகளை பயன்படுத்தி தேவையற்ற குறுஞ்செய்திகளை அனுப்புதல், மிரட்டல் அழைப்புகளை மேற்கொள்ளுதல், பண மோசடி செய்தல், மிரட்டி பணம் பறித்தல் போன்ற பல்வேறு சமூக விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தொலைபேசி இணைப்பின் சட்ட ரீதியான உரிமையாளராக இருப்பதன் மூலம், நீங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம்.

இவ்வாறான செயற்பாடுகளால் சந்தேகநபர்களாக கருதப்படுபவர்கள், நாட்டிலுள்ள பல்வேறு பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு, முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்காக சமூகமளிக்கவேண்டி ஏற்படுவதோடு, நீதிமன்றங்களில் ஆஜராகவும் நேரிடுகின்றது என்பது எமது அனுபவங்களின் மூலம் அறியலாம்.




எவ்வாறாயினும் உங்களது அடையாள அட்டையைப் பயன்படுத்தி பெறப்படும் தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்தி, யாரேனும் ஒருவரால் மேற்கொள்ளப்படும் சமூக விரோத செயற்பாடுகளில், நீங்கள் நிரபராதி என நிரூபிப்பதற்கு, நீங்கள் பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறான நடவடிக்கைகளின்போது, காலம், நேரம், பணம் என்பவற்றை செலவிட வேண்டும் என்பதோடு அதிக மன உளைச்சலுக்கும், சமூக சீரழிவிற்கும் முகம் கொடுக்க நேரிட்ட பெரும்பாலானோரை எமது அன்றாட வாழ்வில் காண்கின்றோம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது, எம்மால் உங்களுக்கு ஆற்றக்கூடிய சேவை மிகக் குறைவானது என்பதோடு, நீங்கள் நிரபராதி என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான தகவல்களை, உங்களுக்கு சேவை வழங்கும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான உதவியை மாத்திரமே எம்மால் வழங்க முடியும். எனவே அவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக எப்போதும் விழிப்பாக இருப்பது புத்திசாலித்தனமாகும்.

மேனகா பதிரண
பிரதி பணிப்பாளர்
வாடிக்கையாளர் தொடர்பு பிரிவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வானில் பூக்கவுள்ள தாமரை



தொலைத் தொடர்பாடல் துறையில் முன்னணியில் இருத்தல் மற்றும் கூட்டு நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, இலங்கை தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. விசேடமாக சர்வதேச தொடர்பாடலின் புதுமைகள், உயர் தொழில்நுட்ப பாவனையை இந்நாட்டில் நிறுவும் நோக்கில், தொடர்பாடல் வசதியை வழங்கும் நிறுவனங்களுடன் உரிய தொடர்பை மேற்கொள்வது, தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவாகும். அதேபோன்று உயர்ந்த தரத்திலான தொடர்பாடல் வலையமைப்பை இந்நாட்டில் நிறுவுவதற்கான உயர்ந்த பங்களிப்பு, இலங்கை தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் தொலைத் தொடர்பாடல் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி மற்றும் திட்டங்கள் தொடர்பில் பல்வேறு கொள்கைகள், முடிவுகளை எடுத்தல் மற்றும் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை பலம் மிக்கதாக மாற்றுவதிலும் விசேட கவனத்தை செலுத்தியுள்ளது. அத்திட்டங்களில், அபிவிருத்தியின் பாரிய படியாக இதுவரை இலங்கையிலுள்ளவர்கள் கண்டிராத, மிகப் பாரியளவிலான நிர்மாணத்தின் அனுபவத்தை பெறுவதற்கு மேலும் இருப்பது ஒன்றரை வருடங்கள் மாத்திரமாகும். அதுதான், கொழும்பின் ஆகாயத்தில் பூக்கவுள்ள, இலங்கையின் சர்வதேச குறியீடாக விளங்கவுள்ள கொழும்பு தாமரை கோபுர கட்டுமானம் மற்றும் அதன் இணைப்பு அங்கங்களை உருவாக்குவதாகும்.

2008 ஆம் ஆண்டின் பிற்பாதி மற்றும் 2009 ஆம் ஆண்டின் முற்பாதியில் இந்த கட்டுமானத்தின் அடிப்படை பேச்சுவார்த்தை மற்றம் திட்டமிடல் என்பன ஆரம்பமானது. அதன் அடிப்படையில் பணிப்பாளர் (திட்டமிடல்) தர்மசிறி டி அல்விஸ் அவர்களின் விடய பட்டியலுக்குள் இணைந்த பாரிய சவால் இது அமைந்தது. அதன் அடிப்படையில் சீன நிறுவன பிரதிநிதிகள், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை பிரிவுடன் இணைந்து இந்த பாரிய நிர்மாணத்தை உருவாக்குவதற்கு அவசியமான பல்வேறு துறை தொடர்பான தகவல்களை ஒன்றுசேர்க்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. விசேடமாக சுமார் 350 மீற்றர் உயரமான இந்த பாரிய கட்டடத்தின் கட்டமைப்பை உருவாக்குவதில், அவர்கள் ஒவ்வொரு பிரிவு தொடர்பிலும் மிக நுணுக்கமான பரிசோதனைகளை மேற்கொண்டனர். அந்த வகையில், திட்டமிடப்பட்ட நிலப்பரப்பிற்குரிய, கொழும்பு நகரின் கடந்த 30 வருட காலநிலை தரவுகள் மற்றும் தகவல்கள், விசேடமாக வான் பரப்பின் காற்றின் வேகம் மற்றும் அதன் மாற்றங்கள், வருடாந்த மழை வீழ்ச்சி மற்றும் வெப்பநிலை, சுழல் காற்று நிலை மற்றும் இயக்கவியல் தொடர்பான தரவுகள்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தகவல்கள் மற்றும் இலங்கை உள்ளடக்கப்படும் நில அதிர்வு வரைபு, புவியியல் ஆய்வு போன்றன சுரங்க பணியகத்திலிருந்து பெறப்பட்டன. அதுபோன்று நில அதிர்வு மற்றும் நில நடுக்கம் தொடர்பில் இலங்கை கட்டுமான துறையில் பின்பற்றப்படும், சர்வதேச தரம் தொடர்பில் இந்த நிர்மாணத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதுபோன்று கட்டுமானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப் பிரதேசத்தின் வெள்ள மட்டம், மின்சாரம் பெறப்படும்போது மின்சார சபையினால் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் மற்றும் நாட்டில் மின்சாரம் வழங்கப்படும்போது பயன்படுத்தப்படும் மின்னழுத்தம், குடிநீர் வசதியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு, தீயிலிருந்தான பாதுகாப்பு தொடர்பான தரம் போன்றவற்றிற்கு அவசியமான தகவல்களும் சேகரிக்கப்பட்டன. மேலும் கொழும்பு நகரில் அழுக்குகளை அகற்றுதல், சுத்தமற்ற நீர் மற்றும் மழை நீர் என்பவற்றை அகற்றுதல் தொடர்பில், நகர திட்டமிடல் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், தொடர்பாடல் தொழில்நுட்ப தகவல்கள், தொலைக்காட்சி, வானொலி ஒளி, ஒலிபரப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் பயன்படுத்தும் தொழில்நுட்ப முறைமை மற்றும் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பம் தொடர்பிலான பல்வேறு தகவல்களை சேகரிக்கப்பட்டு, இந்த பாரிய கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிக்கும் செயற்பாட்டின்போது, குறித்த ஒவ்வொரு நிறுவனமும் நல்கிய ஒத்துழைப்பு பாராட்டுக்குரியதாகும்.

அதன் பின்னர், இந்த திட்டத்தின் அடிப்படை



கட்டமைப்பு, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டதோடு, அவ்வனுமதியின் பின்னர் கட்டுமானத்திற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர் வழங்கல் சபை, மின்சார சபை, கூட்டுறவு முகாமைத்துவ திணைக்களம், கொழும்பு தீயணைப்பு பிரிவு, கொழும்பு மாநகரசபை, நகர பொறியியல் திணைக்களம், கழிவு முகாமைத்துவ திணைக்களம் மற்றும் இத்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ள நிலப் பிரதேசத்திற்கு அருகிலுள்ள, தேசிய போக்குவரத்து திட்டமிடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில், முன்யோசனை நடவடிக்கைகள் (வுசயககைஉ ஐஅியஉவ யுளளநளளஅநவெ) போன்ற பல்வேறு பிரிவுகளுக்கான அனுமதிகளின் பின்னர் இந்த நிர்மாணத்தை கட்டுவதற்காக கொழும்பு மாநகரசபையின் மூலம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு, அதன் அடிப்படை வேலைத்தளத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய, 104.3 அமெரிக்க டொலர் செலவில், 350 மீற்றர் உயரத்தைக் கொண்ட பல்செயற்பாட்டு தொலைத் தொடர்பாடல் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான பொறுப்பின் பங்காளராக China National Electronic Import and Export Corporation (CEIEC), பிரதான கட்டுமான நிறுவனமாக Auro Space Longe March Internnal Trade Company (ALIT) நிறுவனமும், பிரதான ஆலோசனையாளராக மொரட்டுவ கட்டடக்கலை பிரிவும், இத்திட்டத்தின் உரிமையாளராக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவும் செயற்பட்டு வருகின்றன.

ரங்க கும்பலாதரஆரச்சி,
அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பயிற்சி வானொலி கலை என்பது யாது? (Amateur Radio, Ham Radio)

நீங்கள் நீண்ட காலம் தொட்டு வானொலி நிகழ்ச்சிகளை கேட்டு வந்தபோதிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தினந்தோறும் பார்த்து வருகின்றபோதிலும், அது எவ்வாறு ஒலி, ஒளிபரப்பாகின்றது என்பது தொடர்பில் ஆராய்ந்திருக்கிறீர்களா? நீங்கள் தற்போது பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசியிலும் அவ்வாறான (அலை பரப்பும்) நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகின்றது. நடமாடும் தொலைபேசிகள் நமது நாட்டிற்கு 1980 களில் அறிமுகமானபோதிலும், எமது நாட்டிலுள்ள சாதாரண மக்களிடையே காணப்படும் ஒரு சிறு பிரிவினர், தொடர்பாடல் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட காலத்தில், அதற்கு சமமான வசதியை அனுபவித்தனர். அதாவது, தங்களது வீட்டிலிருந்தவாறு உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு நபர்களுடன் தொடர்பாடலை மேற்கொண்டனர்.

இங்கு வானொலி அலைகள் பயன்படுத்தப்பட்டதால், தொடர்பாடல் இடம்பெறும் இரு இடங்களுக்கிடையில் எந்தவொரு வகையிலுமான கம்பியும் (Conducting) பன்படுத்தப்படவில்லை. இது பயிற்சி வானொலி கலை (Amateur Radio) என அழைக்கப்பட்டது.

இது குறித்து பெரும்பாலானோருக்கு தெரியாது என்பதோடு, சாதாரண மக்களிடையே இது பிரபல்யமற்ற ஒன்றாகும். ஆயினும் இது உலகிற்கு புதுமையான விடயம் அன்று. இலங்கையில் 1930 களில் இது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 1895 இல் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் சோதனை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இது, பின்னர் பல்வேறு நாடுகளில் பொழுதுபோக்கான விடயமாக பிரபல்யம் அடைந்தது. தற்போது சவூதி அரேபியா தவிர்ந்த ஏனைய பற்சி வானொலி அலைகள் பிரபல்யம் அடைந்துள்ளன.

பயிற்சி எனும் சொல்லிற்கு அமைய இது புதியவர்களுக்கானது எனும் பொருளை வழங்கிய போதிலும், அது அவ்வாறான ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவீன வானொலி தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு பயிற்சி வானொலி கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளே அதிகளவில் பங்களிப்பைச் செய்துள்ளன. உதாரணமாக, மின்னஞ்சல் இணையத்தளத்தில் அறிமுகமாவதற்கு 10 வருடங்களுக்கு முன்னர், பயிற்சி வானொலி கலையில் காணப்பட்ட அதற்குச் சமமான பெக்கட் ரேடியோ (Packet Radio) முறையின் மூலம் உலகம் முழுவதிலுமுள்ள பயிற்சி வானொலி கலைஞர்களுக்கிடையில் தகவல்களை பறிமாறுவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

பல்வேறு இயற்கை அனர்த்தங்களின்போது பயிற்சி வானொலியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சேவை அளப்பரியதாகும். 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம், இதற்கு சிறந்த உதாரணமாகும். அன்றிலிருந்து நான்கு நாட்கள் வரை இலங்கையின் தென் கரையோர பிரதேசத்திலுள்ள அனைத்து தொடர்பாடல் வலையமைப்புகளும் செயலிழந்ததோடு, இலங்கை பயிற்சி வானொலி சங்கத்தின் (Radio Society of Sri Lanka – RSSL) உறுப்பினர்கள் சிலர், தங்களது தனிப்பட்ட தொலைத் தொடர்பாடல் உபகரணங்களை எடுத்துக்கொண்டு ஹம்பாந்தோட்டை மாவட்ட காரியாலயத்திற்கு சென்றதோடு மேலும் சில உறுப்பினர் குழு தங்களது உபகரணங்களை எடுத்துக்கொண்டு கொழும்பிலுள்ள பிரதமர் காரியாலயத்திற்குச் சென்று, அத்தியவசியமான அனைத்து தகவல்களையும் கொழும்பிற்கு வழங்கினர். இங்கு உயர் மீடிறன் மூலம் (40m மற்றும் 80m) தொடர்பாடல் இடம்பெற்றது.

இது குறித்து ஈடுபாடு உள்ளதாயின், முதலாவதாக நீங்கள் செய்ய வேண்டியது, வானொலி தொடர்பாடல் அலைவரிசை உணரி உபகரணம் (Communication Receiver) ஒன்றை பெற்றுக்கொள்ளுதல் அல்லது தயாரிக்க வேண்டும்.

அவ்வாறான ஒன்றை தயாரிக்க வேண்டுமாயின், முதலில் அனுபவத்தை பெறும் பொருட்டு வேறு எளிய இலத்திரனியல் உபகரணங்கள் சிலவற்றை நிர்மாணிப்பது மிகப் பொருத்தமானதாகும். வெளிநாட்டில், அதவாது தொலை தூரத்தில் உள்ளவர்களுடன் தொடர்பாடாலை மேற்கொள்ள அல்லது அதனை செவிமடுக்க குறும் அலைகளான (Short Wave) உயர் மீடிறன் (High Frequency - HF) அலைகளால் முடியும். இந்த அலைக்கற்றை 3MHz இலிருந்து 30 MHz வரையான அலைநீளத்தைக் கொண்டிருக்கும். இந்த அலைக்கற்றையினுள் சிறிய பல அலைக்கற்றைகள், பயிற்சி வானொலி அலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.50 - 3.80 MHz (80m Band)
7.00 - 7.20 MHz (40m Band)
10.10 - 10.15 MHz (30m Band)
14.00 - 14.35 MHz (20m Band)
18.068 -18.168 MHz(17m Band)
21.00 - 21.35 MHz (15m Band)
24.890 - 24.990 MHz(12m Band)
28.00 - 29.70 MHz (10m Band)

அறிவையும் பொழுதுபோக்கையும் வழங்கும் சர்வதேச நிகழ்வுகள் பல, ஒவ்வொரு வருடமும் இடம்பெறுகின்றன. அவற்றில் மிகப் பிரபல்யம் வாய்ந்த நிகழ்வுகளாக, சர்வதேச சாரணர் வான் ஜப்போறி மற்றும் சர்வதேச கலங்கரை விளக்க பயணம் ஆகியன அமைகின்றன.

**சர்வதேச சாரணர் வான் ஜம்போரி** (Jota – Jamboree on The Air)

இதன் பிரதான நோக்கம், உலகம் முழுவதிலுமுள்ள சாரணர்களுக்கு, பயிற்சி வானொலி தொடர்பாடல் பற்றிய அறிவை வழங்குதல் மற்றும் தொடர்பாடல் முறைகள் பற்றி ஆர்வம் ஊட்டுதலுமாகும். இதற்காக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் மூன்றாம் வார இறுதிநாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விரு தினங்களும் அவர்களுக்கு, அனுமதிப்பத்திரம் பெற்ற பயிற்சி வானொலி கலைஞரின் உதவியுடன் உலகம் முழுவதிலும் உள்ள ஏனைய சாரணர்களுடன் நேரடியாக தொடர்பாடும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இலங்கையிலும், கடந்த 35 வருட காலம் தொட்டு பாடசாலைகள் பலவற்றின் ஊடாக வான் ஜம்போரி நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

**சர்வதேச கலங்கரை விளக்க பயணம்** (International Lighthouse Expedition)

இந்நிகழ்விற்காக ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தின் மூன்றாம் வார இறுதி நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இங்கு, அனுமதிப்பத்திரம் கொண்ட பயிற்சி வானொலி கலைஞர்கள், வெளிச்ச வீட்டிலிருந்து தங்களது தொடர்பாடல் உபகரணங்களைப் பயன்படுத்தி, அவ்வாறான ஏனைய மத்திய நிலையங்களுடன் தொடர்பாடலை மேற்கொள்வர். இங்கு, பயிற்சி வானொலி அனுமதிப்பத்திரம் அல்லாத எந்த ஒருவராலும், இவ்விரு நாட்களிலும், பயிற்சி வானொலி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டவரின் மேற்பார்வையின் கீழ், தொடர்பாடல் உபகரணத்தை பயன்படுத்துவதற்கான அனுமதி கிடைப்பது, இந்நிகழ்வின் மிகப் பெறுமதிவாய்ந்த வசதியாகும்.


பயிற்சி வானொலி அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்காக, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் (Telecommunication Regulatory Commission of Sri Lanka - TRC) வருடாந்தம் நடாத்தப்படும் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும். அதில் சித்தியடைந்த பின், அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும்போது, இராஜாங்க பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் இரகசிய விசாரணைகளின் பின்னர் உங்களுக்கு, பயிற்சி வானொலி அனுமதிப்பத்திரம் மற்றும் உங்களுக்கே உரித்தான தனியான குறியீட்டு பெயரும் வழங்கப்படும்.

இந்த பரீட்சை தொடர்பில் அவசியமான பாடநெறி மற்றும் கடந்த கால வினாப்பத்திரங்களை www.qsl.net/4s7vj எனும் இணையத்தளத்தில் (Ham Radio) பெற்றுக் கொள்ள முடியும். பரீட்சைக்கு முன்னரான முற்கூட்டிய பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்காக, இணைய வழியான பரீட்சைக்குத் தோற்றலாம். இதற்காக www.rss.lk எனும், இலங்கை பயிற்சி வானொலி சங்கத்தின் இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள். இச்சங்கத்தின் தபால் முகவரி மற்றும் கௌரவ செயலாளரின் மின்னஞ்சல் முகவரி என்பன கீழே வழங்கப்ப ட்டுள்ளன.

secretary@rssl.lk
Radio Society of Sri Lanka
PoBox 907,
Colombo.
ஜயசிறி விஜயரட்ண - 4S7VJ
www.qsl.net/4s7vj




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஊழியர்களிடையே, கலை இரசனையை அதிகரிக்கும் நோக்கில், பிரபல கலைஞர்களின் பங்களிப்புடன், காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள். பேராசிரியர் ஜயலத் மனோரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர் மஹாநாம விக்ரமசிங்க மற்றும் பிரபல நடிகர் வில்சன் குணரத்ன ஆகியோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.





ஜனாதிபதி மைத்திரிபால சிறி
ஆம் திகதி, இலங்கை தொலை
மேற்பார்வை பயணமொன்றை
ஜனாதிபதிக்கு பொறுப்பான
இந்த ஆணைக்குழுவின் நோக
தொடர்பில், அதிகாரிக

இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் ஊழியர்களின் பங்களிப்புடன் 2016 ஆம் ஆண்டு பொசொன் பௌர்ணமி தினத்தில், பொரலஸ்கமுவ போதி விகாரையில் இடம்பெற்ற ஐஸ்கிறீம் தானம்.



## புகைப்பட



துறைசார்ந்தவர்களுக்காக இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி பட்டறை ஒன்று, ஆணைக்குழுவின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. ''தேசிய அபிவிருத்தியை பலப்படுத்துவதனை நோக்காகக் கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு'' எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பயிற்சிப் பட்டறை ஜுன் 14 ஆம் திகதி இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் '
ஆரம்பகர்த்தாவும், தொலைபேசி
வழங்குனருமான ஸ்ரீ லங்கா டெ
உடன்படிக்கையொன்று அண்மையில்
கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற
தொலைத் தொடர்புகள் ஆணைக்கு
சிறிசேன அவர்களும் ஸ்ரீ லங்கா டெலி
சிறிசேனவும் உத்தியோக





ிரிசேன அவர்கள், கடந்த ஜூலை 07 லைத் தொடர்புகள் ஆணைக்குழுவுக்கு ம மேற்கொண்டிருந்தார். இதன்போது விடயங்களின் கீழ் அமைந்துள்ள ாக்கம் மற்றும் எதிர்கால திட்டங்கள் களுடன் கலந்துரையாடினார்.

# பதிவுகள்



"தாமரை கோபுரம்", தொலைத் தொடர்பின் வசதியை வழங்கும் உத்தியோகபூர்வ டலிகொம் நிறுவனத்துடன், ஒத்துழைப்பு கைச்சாத்திடப்பட்டது. கொழும்பு சின்னமன் வைபவ ரீதியிலான நிகழ்வில், இலங்கை குழுவின் பணிப்பாளர் நாயகம் சுனில் எஸ். லிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க கபூர்வமாக கைச்சாத்திட்டனர்.





தகவல் தொடர்பாடல் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், பாடசாலை மாணவிகளை இலக்காகக் கொண்ட பயிற்சிப் பட்டறை, "2016 உலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தினம்" கொழும்பு ஜனாகி ஹோட்டலில் இடம்பெற்றது. மேல்மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த பயிற்சிப் பட்டறை, இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு மற்றும் சர்வதேச தொலைத் தொடர்பு சங்கம் ஆகிய நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.




கடந்த காலத்தில், கொழும்பை மிக அண்டிய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நிலை போன்ற அவசர அனர்த்த நிலைமைகளின்போது, தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக செய்மதி தொலைபேசிகளை வழங்கும் நடவடிக்கை, சர்வதேச தொலைத் தொடர்பாடல் சங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு வழங்கப்பட்ட இத்தொலைபேசிகளை வழங்கும் வகையிலான அடையாளப்படுத்தும் நிகழ்வில், முதல் தொலைபேசி, இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சுனில் எஸ். சிறிசேன அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதோடு, பின்னர் அவை அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# டிஜிட்டல் என்றால் என்ன?

டிஜிட்டல் என்பது, தகவல்களை உருவாக்கக்கூடிய, சேமிக்கக்கூடிய மற்றும் மாற்றியமைக்கக்கூடிய இலத்திரனியல் தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பம், அடிப்படையில் செய்மதி மற்றும் கண்ணாடி இழை (Fiber Optic) தகவல் இடமாற்ற புதிய ஊடகத்தின் வழியாக பயன்படுத்தப்படுகின்றது. தொலைக்காட்சி, வானொலி ஒளி, ஒலிபரப்பு மற்றும் தொலைபேசி தொடர்பாடல் தொடர்பில் இதுவரை பயன்படுத்தப்பட்ட அனலொக் தொழில்நுட்பத்திற்கு பதிலாக டிஜிட்டல் தொழில்நுட்பம் வழியாக, மாற்றமடையும் (Varying) அதிர்வெண்களின் ஊடாக இலத்திரனியல் சமிக்ஞைகளை கொண்டு செல்கின்றது.

உலகம் முழுவதிலும் மிக வேகமாக முன்னேற்றமடைந்துள்ள, தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் புதிய பிரவேசமாக டிஜிட்டல்மயமாதலை குறிப்பிடலாம். அது, உலகம் முழுவதிலுமுள்ள மக்களின் சிந்தனை, வெளிப்பாடுகள், தொடர்பாடல் விடயங்கள் மற்றும் வாழ்வாதார தொழில்களில் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச தொலைத் தொடர்பாடல் சங்கம் தெரிவிக்கின்றது.


(http://www.itu.int/net/wsis/basic/faqs_answer.asp?lang+en&faq_i=42)

ஒரு நாட்டின் அபிவிருத்தி தொடர்பிலான அளவீடுகளில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம், பிரதான இடத்தை பெறுகின்ற இக்காலத்தில், தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் அறிவாற்றல் போன்றன உயர் வீதத்தை கொண்டுள்ள இலங்கை, டிஜிட்டல்மயம் எனும் புதிய எழுச்சியை நோக்கி பிரவேசிப்பது மிக அவசியமான காரணியாக அமைகின்றது.

உலகின் பெரும்பாலான நாடுகள் இணைய பிரவேசம், தொடர்பாடல் ஊடகம், டிஜிட்டல் உருவாக்கம் போன்றன, பொருளாதார அபிவிருத்தியின் புதிய பாதையாக அறியப்பட்டுள்ளதோடு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னேற்றம் தொடர்பில் அவசியமான புதிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை உருவாக்கும் செயற்பாடுகளும் ஆரம்பமாகியுள்ளன.

செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் ஒலிபரப்புகளில், இரு எண் முறை (Digital) தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் முறை, பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதோடு, உள்நாட்டு வான்வழி (Terrestrial) ஒலிபரப்புகளில் டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாடு, கடந்த 10 வருடங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய சங்கத்திற்கு கீழுள்ள பெரும்பாலான நாடுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தற்போது டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உச்ச பயன்பாட்டை மேற்கொள்வதில் முக்கியத்துவம் காட்டுகின்றன. சர்வதேச தொலைத் தொடர்பாடல் சங்கத்தின் தகவல்களுக்கு அமைய, அதிக அலைவரிசைகளை (Channel), குறைந்த செயற்பாட்டு செலவு மற்றும் புதிய வர்த்தக எழுச்சியின் ஆரம்பத்தை ஏற்படுத்தும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, ஒரு நாட்டிலுள்ள ஒலிபரப்பாளர்களுக்கு அதிக பொருளாதாக இலாபத்தை ஏற்படுத்தும்.

ஒலிபரப்பு மற்றும் தொலைத் தொடர்பு சேவைகள் தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற அலைவரிசைகளை அல்லது அதிர்வெண்களை முகாமைத்துவம் செய்வதற்காக, ஐக்கிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு, அந்த அடிப்படை வசதிகளை மேலும் முன்னேற்றமடையச் செய்வதற்கு அவசியமான நிதியுதவிகளை வழங்குவது, தற்போது இடம்பெற்று வருகின்றது. டிஜிட்டல் மயமாதல் செயற்பாட்டை, தொலைக்காட்சி ஒளிபரப்பின் ஊடாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை, செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தற்போது ஆயத்தமாகியுள்ளது. இலங்கையர்கள், இது தொடர்பிலான அனுபவத்தை பெற்றுக்கொள்ள, தற்போது ISDB-T தொழில்நுட்பம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மயம் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முன்னர், இலங்கையரிடையே தொலைக்காட்சியின் பரவலாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என்பது தொடர்பில் ஆராய்வது மிக முக்கியமானதாகும்.

தகவல் பரிமாற்றம், பொழுதுபோக்கு மற்றும் கல்வியை மையமாகக் கொண்ட, உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பரவலடைந்து காணப்படும் தொலைக்காட்சி ஊடகத்தின் முன்னோடி, ஜப்பான் ஆகும். அந்த ஊடகம் இலங்கைக்குள், கலவி ஊடகமாக பிரவேசித்தது. நாடு முழுவதும் விரிவாக்கமடைந்த முதல் காலகட்டத்திலேயே, மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்ற இந்த ஒளி, ஒலி ஊடகத்தை இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெருமை அனில் விஜேவர்தன, பொப் கிறிஸ்வி மற்றும் ஷான் விக்ரமசிங்க ஆகிய மூன்று வர்த்தகர்களையே சாரும்.

ஒளி, ஒலியை அடிப்படையாகக் கொண்டு, மின் காந்த அலைகளை பயன்படுத்தி, மின் ஊடகத்தின் ஊடாக வழங்குவதே, தொலைக்காட்சி ஒளிபரப்பு தொழில்நுட்ப முறையாகும். NTSC, PAL மற்றும் SECAM ஆகிய பிரதான மூன்று ஒளிபரப்பு முறைகள் காணப்படுகின்றன. இலங்கையில் பயன்படுத்தப்படுவது PAL முறையாகும். PAL முறையில் சாதாரண தொலைக்காட்சி காட்சிப் பகுதியில் காணப்படும் வெளிப்பாட்டு கோடுகளின் எண்ணிக்கை சுமார் 625 ஆகும். மேம்படுத்தப்பட்ட தொலைக்காட்சி தொழில்நுட்பத்தில் அக்கோடுகளின் எண்ணிக்கை 1125 ஆக காணப்படும்.

இதன் மூலம் கண்ணுக்கு வலியை ஏற்படுத்தாத வகையில் காட்சிகள் தோன்றும். பாரிய ஒலி தோன்றும் என்பதோடு அது தெளிவாக அமைந்திருக்கும். ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியின் அசையாத உருவத்தை நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ளும் வசதியும் இதில் கிடைக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அனலொக் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒளிபரப்பை மேற்கொள்ளும்போது, அதிக எண்ணிக்கையிலான அலைகள் பயன்படுத்தப்படுவதோடு ஒரு அலைவரிசையின் ஊடாக ஒரு நிகழ்ச்சியையே வெளியிட முடியும். டிஜிட்டலின் மூலம் சாதாரண நிலையில் (Stranded Definition) 8 சமிக்ஞைகளின் கீழ், அதியுயர் நிலையில் (High Definition) 4 சமிக்ஞைகளின் கீழ் நிகழ்ச்சிகளை வெளியிட முடியும். குறைந்த செயற்பாட்டு செலவை பயன்படுத்துவதால், குறைந்த மின்சாரமே அவசியம் என்பது இதன் விசேடத்துவமாகும்.

அது போன்று ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு புதிய சேவைகளை அறிமுகப்படுத்துவதும், அலைவரிசைகளை மிகவும் பலனுள்ள வகையில் பயன்படுத்துவதன் மூலம், எஞ்சுகின்ற அலைவரிசை அலைக்கற்றைகளை வேறு தொடர்பாடல் சேவைக்காக பயன்படுத்துவதும் அரசின் நோக்கமாக அமைந்துள்ளது. இங்கு சுயாதீன டிஜிட்டல் ஒளிபரப்பு வலையமைப்பு செயற்பாட்டாளரால், விரைவான மாற்றம் செய்யக்கூடியதும் பாதுகாப்பானதுமான பலன் மிக்கதான இந்நிகழ்ச்சிகள் தொடர்பில் புதிய பிரவேசத்தை நோக்கிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். நிகழ்ச்சி பாதுகாப்பு சேவையும் மேற்கொள்ளப்படுவதால், தயாரிப்பாளர்களால் இந்நிகழ்ச்சிகளை பாதுகாப்பது இலகுவான விடயமாகும்.



அதேபோன்று, தகவல் தொழில்நுட்ப சேவை முன்னேற்றத்துடன் ஒத்திருக்கும் வகையில் ஒளிபரப்பு சேவை வளர்ச்சியையும் இதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி நன்மை பயக்கத்தக்க நிலைமைகளோடு, தொடர்பாடல் உபகரணங்களின் அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்படும் பரீட்சிப்புகள் மற்றும் ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பாவனை முன்னேற்றகரமாகியுள்ளன. இதன் மூல ஆரம்பத்திற்கு காரணமாக, 1964 இல் டோக்கியோ நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகளை நடாத்துவதற்கான, செய்மதியின் ஊடாக நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பு (Direct Broadcasting by Satellite - DBS) மற்றும் அதி துல்லியமான தொலைக்காட்சி (High Definition Television - HDTV) என்பன தொலைக்காட்சி தொழில்நுட்ப ஆய்வுகளாகும். இலங்கையின் தொலைக்காட்சி சேவையை பயன்படுத்துகின்ற சுமார் 3.5 - 4 மில்லியன் மக்கள், பிரதானமாக பயன்படுத்துவது உள்நாட்டு வான்வழி (Terrestrial) தொலைக்காட்சியான FTA (Free to Air) எனும் அனலொக் தொழில்நுட்பத்தில் அமைந்துள்ள போதிலும், குறிப்பிடும் அளவிலானோர், செய்மதி வழியான டிஜிட்டல் தொலைக்காட்சி, IPTV எனும் முறைகளின் மூலமாகவும் தொலைக்காட்சி ஒளிபரப்பை பார்வையிடுகின்றனர். ஒளி, ஒலியின் நிலை தொடர்பான தரத்தின் அடிப்படையிலும், மிகச் சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் மேற்குறிப்பிட்டோரின் எண்ணிக்கை தங்கியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயினும் 2014 ஆம் ஆண்டு, டிஜிட்டல் அடிப்படை வசதிகளின் மேம்பாடு தொடர்பில், ஜப்பானிடம் பெறப்பட்ட கடன் உதவி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இரு தரப்பு உடன்படிக்கைக்கு அமைவாக ISDB-T முறைமை, இது தொடர்பான மிகச் சிறந்த முறை என பிரேரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் விரைவாக தகவல்களை பெறும் வகையில் அலைவரிசைகளின் உச்ச அளவில் பயன்படுத்தவும், தொடர்பாடல் அடிப்படை வசதியின் முன்னேற்றத்தின் மூலம், அனர்த்த தொடர்பாடல் உள்ளிட்ட பல்வேறு தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதை பரவலடையச் செய்வதும் இதன் பிரதான நோக்கமாக அமைகின்றது. சுனாமி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கின்ற நாடு என்ற வகையில், அது தொடர்பான முற்கூட்டிய விழிப்பு, அனர்த்த அறிவிப்பு மார்க்கமாக, இது அறியப்பட்டிருப்பதானது அதற்கான காரணமாகும். அவ்வாறே கையடக்க தொலைபேசி மற்றும் உபகரணங்கள் மூலம் ஒலிபரப்பு சமிக்ஞைகளை பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பது பாதைகள் மூடப்படுதல், காலநிலை அறிக்கை, கல்வி மற்றும் வைத்திய தகவல்கள், செய்தி அல்லது விளையாட்டு தகவல்கள் போன்றவற்றை, கையடக்க தொலைபேசி மற்றும் ஏனைய நடமாடும் உபகரணங்களுக்கு அனுப்ப முடியுமாக இருப்பது அதன் மற்றுமொரு காரணமாகும். ஜப்பானில் இவ்வாறான நடமாடும் அலை வெளியீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல் தொகுதி மிக இலாபகரமானதாக காணப்படுகின்றது. அது போன்று ஜப்பானால் அறிமுகப்படுத்தப்படும் ISDB-T தொழில்நுட்பத்தின் மூலம், அவசர அனர்த்தங்கள் தொடர்பில் உடனடியான அறிவிப்பை மேற்கொள்ள முடியும். இதனால் ஸ்மார்ட் போன் மற்றும் டெப்லட்களின் ஊடாக இந்த தகவல்களை மிக இலகுவாக அனுப்புவதன் மூலம், சுனாமி மற்றும் ஏனைய இயற்கை அனர்த்த நிலைமைகளை மிக இலகுவாக மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும். ISDB-T தொகுதியின் மூலம் தரவுகளை வெளியிடுதல் மற்றும் பல்வேறு தகவல் பிரச்சாரத்தை மேற்கொள்ளுதல் போன்றவற்றை ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

தகவல் தரவுகளை ஒலிபரப்ப முடியுமாக இருப்பதால், நாட்டின் கல்வித் தேவையையும் பூர்த்தி செய்ய முடியுமாக இருப்பது மேலும் சிறப்பான விடயமாகும். ஒளி, ஒலி ஊடக பாவனையின் மூலம் முறையான கல்வித் தகவல்களைக் கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பேசுவோருக்கு, தொலைக் கல்வியை வழங்க முடியும். அது போன்று கிராமிய மக்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. உடல் குறைபாடுகளைக் கொண்டவர்களுக்கு உப தலைப்புகள் மூலம் அல்லது ஒலி அல்லது உருவங்களை பயன்படுத்துவதன் மூலம் புதிய உலகத்திற்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பும் இதன் மூலம் ஏற்படும்.

டிஜிட்டல் மயமாதல் கனவை நனவாக்குவது, இலங்கை தொடர்பாடல் துறை மாத்திரமன்றி பொருளாதார பிரிவின் அபிவிருத்திக்கும் மிக அத்தியவசியமானதும் முக்கியமானதுமான மைல்கல்லாக, மேற்படி விடயங்கள் மூலம் தெளிவாகின்றது. டிஜிட்டல் மயமாதலின் பிரவேசத்தை, தொடர்பாடல் உபரணங்களை பயன்படுத்தும் சிறப்பான வசதியை, இது வரை இலங்கையின் தொடர்பாடல் பாவனையாளர்களுக்கு வழங்கிய, இலங்கையின் தொடர்பாடல் துறையின் முதல்வனான, இலங்கை தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, அம்மைல்கல்லை எட்டுவதற்கான சவாலை நோக்கி செல்கின்றது.

தில்ஹானி உடவெல
அபிவிருத்தி உத்தியோகத்தர்
போட்டித்தன்மை (செயற்பாட்டு பகுப்பாய்வாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**சந்தோச அதிர்வெண்**

# வாழ்க்கையும் சந்தோசமும்



ஒரு சிறிய கிராமம் ஒன்றில் மிக புத்திசாதுர்யமான மனிதன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் கிராமத்தின் தலைவனாகவும் இருந்ததோடு, பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவனால் முன்வைக்கப்பட்ட கருத்துகள், ஆலோசனைகள் அனைத்து கிராம மக்களின் வரவேற்பை பெற்றிருந்தன.

கிராமவாசிகள் தமது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள அவரிடம் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக அவரது ஒரே புதல்வன், வாழ்க்கை தொடர்பில் எவ்வித மகிழ்ச்சியும் இன்றி சோம்பல் தனமாக வாழ்ந்து வந்தான்.

தந்தையால் கூறப்படும் அறிவுரைகளை அவன் எடுத்து நடக்காததால், அவனது தந்தை மிக மன வேதனையுடன் இருந்தார். ஒரு நாள் தனது மகனை அழைத்து, "மகனே, நீ இப்போது வளர்ந்து விட்டாய். வாழ்க்கை பொறுப்பை பற்றி அறிந்து கொள்வது அவசியம்" என்று கூறினார்.

"அப்பா, நிறைய பணம் சம்பாதித்து, செல்வந்தனாக, சந்தோசமாக வாழ்வதற்கு நான் ஆசைப்படுகிறேன்"

தந்தை சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, அவனது கேள்விக்கான பதிலை எதிர்பார்த்து தனது முகத்தை பார்த்துக் கொண்டிருந்த மகனிடம் "மகனே, உனக்கு வாழ்க்கை பற்றி கற்றுத் தர நான் விரும்புகிறேன். நன்றாக கவனத்தில் வைத்துக்கொள். நான் சொல்லித் தருவது போன்று நடந்துகொள்வாயாயின் உன்னால் சந்தோசமாக வாழ முடியும்" என்றார்.

மகிழ்ச்சியடைந்த மகன், தந்தையின் முக்கியமான அறிவுரை என்னவாக இருக்கும் என சிந்திக்க ஆரம்பித்தான்.

அடுத்த நாள் மகனை அழைத்த தந்தை, காலங்களுக்கு பொருந்தும் வகையிலான நான்கு ஆடைகள், சமைக்காத உணவு, தானியம், சில நாணயங்கள மற்றும் வரைபடம் ஆகியன அடங்கிய பை ஒன்றை அவனிடம் வழங்கினார்.

"மகனே இந்த வரைபடத்தில் புதையல் காணப்படும் இடம் ஒன்றை குறிப்பிட்டுள்ளேன். அதனை தேடிக் கண்டுபிடித்துக்கொள்" என கூறினார். தந்தை தெரிவிக்கும் இந்த புதையலை கண்டுபிடித்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் என்னால் சந்தோசமாக வாழ முடியும் என மகன் தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அடுத்த நாள் தந்தையிடமிருந்து விடைபெற்ற மகன், விடியற் காலையிலேயே புதையலை தேடிய பயணத்தை ஆரம்பித்தான். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அவனுக்கு ஆறுகள், மலைகள், குளங்கள், காடுகளை கடந்து செல்ல நேரிட்டது. புதையலை கண்டுபிடித்து மீண்டும் தனது தந்தையின் முகத்தை காண வேண்டும் என வேண்டிக்கொண்டான். இவ்வாறு சிறிது சிறிதாக பல நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் பல கடந்தன. இப்பயணத்தில் அவனுக்கு பல்வேறு நபர்களை சந்திக்க நேரிட்டது. சிலர் அவனுக்கு உணவு, தங்குவதற்கு இடம் போன்றவற்றை வழங்கியதோடு, திருடர்கள், கொள்ளையர்களுக்கு முகம் கொடுக்கவும் நேரிட்டது. காலநிலை சீரற்ற நிலைமைகளில், பயணத்தை சற்று தாமதித்தால் தனக்கு முன் வேறொருவர் அப்புதையலை எடுத்து விடுவர் என எண்ணி பயணத்தை இடைவிடாது தொடர்ந்தான்.

இறுதியாக பல வருடங்களின் பின்னர், வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, தந்தை குறிப்பிட்டிருந்த புதையல் இருக்கும் இடத்தை அடைந்தான். தொடர்ச்சியாக இரண்டு நாள் புதையலை தோண்டும் பணியில் ஈடுபட்ட அவனால், புதையலை எடுப்பதற்கான முயற்சியில் தோல்வியடைந்ததாக எண்ணிய அவன், மூன்றாவது நாள் மீண்டும் தனது வீட்டை நோக்கிச் செல்வதற்குத் தீர்மானித்தான். அவன் அவ்வாறு திரும்பும் வேளையில் வசந்த காலம் ஆரம்பமாகி இருந்தது. பறவைகளின் இனிய ஒலி பல திசைகளிலும் கேட்டதோடு, மரங்கள் முழுவதும் பழங்கள் நிறைந்து, பூச் செடிகளில் பூக்கள் நிறைந்து, வழி முழுதும் மணம் பரப்பி காணப்பட்டன.

அவ்வாறு அவன் வீடு திரும்பும் வழியில், தனது உணவை தேடி பெற்றுக்கொண்டதோடு, உடையையும் தைத்துக் கொண்டான். சீரற்ற காலநிலையிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எவ்வாறு என அறிந்து கொண்டான். வன ஜீவராசிகள் மற்றும் ஆபத்தான செடிகளிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது என கற்றுக்கொண்டான். தான் சென்ற வழியில் தனக்கு உதவி உபகாரங்கள் செய்தவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்தவாறு பல நாட்களை கடந்து சென்றான்.

சில வருடங்களின் பின்னர், தனது வீட்டை அடைந்த அவன், நேராக தனது தந்தையிடமே சென்றான். சரியான ஊன், உறக்கமின்றி காலத்தை கழித்துக் கொண்டிருந்த அவனது தந்தை தனது மகனின் வழமையான காலடி ஓசை கேட்டு மகிழ்ச்சியுடன் எழுந்தார்.

"மகனே உனது பயணம் எவ்வாறு இருந்தது? " என அன்புடன் கேட்டார்.


"அப்பா எனது பயணம் மிகச் சிறப்பாக இருந்தது. ஆனால் புதையல் தேடிச் சென்ற எனது நோக்கம் நிறைவேறவில்லை. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இடத்தில் அது இருக்கவில்லை. எனக்கு முன்னர் அதனை யாரோ எடுத்திருக்கலாம்." என்றான்.

மிக சத்தமாக சிரித்த தந்தை, அனுக்கு பின்னால் இருந்த கதிரையில் அமருமாறு சைகை செய்தார். "மகனே அங்கு புதையல் ஒன்றும் இல்லை"

"அப்படியானால் ஏன் என்னை புதையலை எடுக்குமாறு அனுப்புனீர்கள்"

"நான் மகனிடம் மீண்டும் கேட்கிறேன், புதையலைத் தேடிச் சென்ற உனது பயணம் எவ்வாறு அமைந்தது"

"நான் பயணித்த பாதையில் பல்வேறு நபர்களை நான் சந்தித்தேன். பல்வேறு காலநிலைகளை சந்தித்தேன் ஆனால் எனது ஒரே நோக்கமாக, வேறு யாரும் எடுக்கும் முன்னர் அப்புதையலை எடுத்துவிட வேண்டும் என்பது அமைந்திருந்தது. ஆனால் மீண்டும் வீடு திரும்பும் வழியில் எனக்கு அதிக நேரம் கிடைத்தது. நான் அதிக சந்தோசமடைந்தேன். பலவற்றை அறிந்து கொண்டேன். நல்ல மனிதர்களை சந்தித்தேன். புதையலை கண்டுபிடிக்க முடியவில்லை என்ற கவலை தானாக மறைந்துவிட்டது"



மிக அன்புடன் தனது மகனை அணைத்த தந்தை,

"மகனே வாழ்க்கையின் நோக்கம் பற்றி அறிந்திருப்பது அவசியமானதாகும். ஆனால் வாழ்க்கைப் பயணத்தின் நோக்கத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் உண்மையான புதையல் இழக்கப்படலாம். வாழ்க்கையின் உண்மையான புதையல் சந்தோசமே. சந்தோசமான வாழ்க்கையின் சொந்தக்காரனே உண்மையான செல்வந்தன்" என கூறினார்.

தனது முகத்தைப் பார்த்து, மிக ஆழமான தொனியில் தனது தந்தை தெரிவித்த வசனங்களில் எவ்வளவு ஆழமான உண்மைகள் காணப்படுகின்றன என எண்ணிய மகனின் கண்களில் ஆனந்த கண்ணீர் நிறைந்தது.

முதிதா குலதுங்க
நிர்வாக பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பேராசிரியர் ஜயலத் மனோரத்னவின்

# 'ஹண்ட நிஹண்ட'

## நாடகம் பற்றிய பார்வை



பாடல், கவிதை, நாடகம், சினிமா போன்றன எமது நாட்டின் இரசிக சமூகத்தின் இரசனைக்கும் உள மகிழ்ச்சிக்கும் உள்ளான விடயம் என்பதனால், அது வரவேற்பைப் பெற்றுள்ள கலை ஊடகங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது. இலக்கியம் என்பது, சுமார் 11 நூற்றாண்டுகளுக்கு முன்னர், சிறந்த நாகரீக பண்பாட்டைக் கொண்டதாக கருதப்பட்ட மிகச் சிறப்புவாய்ந்த கலை ஊடகம் என பெயர்பெற்றுள்ளது. சினிமா தவிர்ந்த, ஆரம்ப கால பாடல், கவிதை, நாடகம் என்பன மனதை ஈர்க்கக் கூடியதும் இலக்கியச் சுவை கொண்டதுமான மூன்று கலை ஊடகங்களாகும். சினிமாவின் மொழி, உருவமைப்பை கொண்டதாக இருந்த போதிலும், இலக்கியத்திலிருந்து முற்றாக வேறுபட்ட ஒன்றல்ல. புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறானதும் தொல்பொருளியல் ஆதாரங்களைக் கொண்ட சிற்பங்கள் போன்றன, சிற்பக்கலை தொடர்பில் இத்தீவின் நாகரீக பண்பாட்டின் தனித்துவத்தை உலகிற்கு பறைசாற்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த கலையாகும்.

பேராசிரியர் ஜயலத் மனோரத்னவின் புதிய கலைப் படைப்பான 'ஹண்ட நிஹண்ட' (ஒலி நிசப்தம்) வின் மூலம், அவர் வெளிக்கொண்டு வர முயன்ற, எமது நாட்டின் இசைத் துறைக்கு உரிய மக்கள் மயமான பிரதிவிம்பம் காண்பிக்கும் சக்கரத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நவீன இரசிக சமூகத்தில் பாரிய பின்னடைவே காணப்படுகின்றது என்பது புலனாகின்றது. இது தவிர ஏனையவர்களிடம் இது தொடர்பில் பல்வேறு மாற்றுக் கருத்துகள் காணப்படுகின்றது எனவும் காட்டுகின்றது.

இங்கு, மனோவின் ஹண்ட நிஹண்ட நாடகம் பற்றி விமர்சிப்பது என்பது எனது நோக்கமன்று. இது வரை அது தொடர்பில், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. மனோவின் நாடகத்தின் ஹண்ட நிஹண்ட பெயரில் காணப்படும் அபூர்வம் மற்றும் முரண்பாடு தொடர்பில் நான் காண்பது, தற்போதுள்ள இரசிக சமூகத்தில் எவ்வாறான எண்ணங்களும், யதார்த்தங்களும் காணப்படுகின்றது என்பது தொடர்பில் அதிலிருந்து வெளிவருவதனால் ஆகும். இது கலைத் துறையில் மாத்திரமன்றி, அரசியல் துறையையும் மையமாகக் கொண்டதாகவும் வேறு துறைகளிலும் பரவி வருகின்ற அறிகுறிகள் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். இந்நிலையை சரளமாக நோக்குவோமாயின், நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான ஆன்மீக ரீதியிலான ஒலி அமைதியாகி, நாட்டில் அநாவசியமான வரம்பு கடந்த நீர்க்குமிழியை தோற்றுவிப்பது போன்றதாகும்.

வரலாற்று பரிணாமம் இடம்பெற்று வந்த காலத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்து இருந்து வந்த கலாசார விடயங்களில் மொழி, மதம், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் கலை அம்சங்கள் உள்ளிட்ட அனைத்தும் மாற்றமடைந்து ஆபத்தை எதிர்நோக்கியதுடன், நவீன சமூகத்தின் கவனத்திற்குள்ளானமையானது, சுமார் 19 ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்டுள்ளதாக, தகவல்களை ஆராயும்போது புலனாகின்றது. நாடகம், இசை, இலக்கியத்துடன் சமயம் தொடர்பான தகவல்களும் அதற்கு சான்று பகிர்கின்றன.

சி. தொன் பெஸ்தியன், ஜோன் டி சில்வா, சார்ள்ஸ் டயஸ் போன்ற, சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழி கலை இலக்கிய முன்னோடிகள், பியதாஸ சிறிசேன, டப்ளியூ. ஏ. சில்வா போன்ற இரு மொழி கற்பனைக் கதை எழுத்தாளர்களின் படைப்புகள், தற்கால சமூக சந்தர்ப்பத்தினால் அவர்களின் உளத் துடிப்பிடிலிருந்து உருவானதாகும். விடேசமாக பௌத்த மதத்தின் வளர்ச்சிக்காக தேசியவாத உணர்வுளால் தூண்டப்பட்டிருந்த அநகாரிக தர்மபால அவர்களின் குரலை மேலோங்கச் செய்யும் கொள்கைகள், ஒரு வில அறிஞர்களின் விமர்சனத்திற்குள்ளான போதிலும், தனது நாட்டின் கலாசார தனித்துவத்தை வெளிக்காட்டுவது தொடர்பில், அவர் ஆற்றிய சேவைகளை துச்சமாக மதிப்பிட முடியாது.

தோன்றியுள்ள 21 ஆவது நூற்றாண்டு, உலகின் சகல மனித சமூகத்தினதும் உணர்வுகள் மிகச் சிறந்த, ஆற்றல் மிக்க தன்மைக்கு வழிவகுத்துள்ளது. இந்நிலையானது, ஒரு சில குறிப்பிடும்படியான விடயங்கள் தொடர்பில், அமேசன்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கா போன்ற அடர் வனாந்தரங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள காட்டுவாசிகளின் கலாசாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக, மனிதவியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். விஞ்ஞான கண்டுபிடிப்புகளில், உலகப் பெறுமதிமிக்க கணனி மற்றும் அது சம்பந்தப்பட்ட அனைத்து தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் அது சார்ந்து உருவான 'க்ளோபல் விலேஜ்' எனும் பூகோள கிராமம எண்ணக் கருவின் மூலம், உலகம் சுருங்கியுள்ளது எனும் கோட்பாடு உள்ளிட்ட பல மாற்றங்களுக்கான அடிப்படை என்பதை யாராலும் மறுக்க முடியாதாகும்.

இதனாலேயே சம்பிரதாய கலாசார பண்புகள் போன்ற விடயங்களும் மாற்றங்களுக்கு உள்ளாகின்றமை கண்கூடான விடயமாகும். நாட்டில் வாழுகின்ற மக்களின் தேச எல்லை, அதிலுள்ள மக்களிடம் காணப்படும் மொழி, மதம், நடைஉடை, வாழ்க்கை முறை, அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை போன்றனவும் அதனுடன் இணைந்த தனித்துவமான விடயங்கள் போன்றன பாரிய சவால்களுக்கு உள்ளாகி இருக்கின்றமை இன்றைய நவீன உலகின் பேசுபொருளாக மாறியுள்ளது.

அறுபதுகளில், எமது நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலை தொடர்பான பரிணாம மாற்றம் என குறிப்பிடக்கூடிய, ஒரு அபிவிருத்தியின் திருப்புமுனைக்கு வித்திட்ட காலகட்டம் என பதியப்படுகின்றது. இலக்கியவாதியான மார்டின் விக்ரமசிங்கவினால் அவரது சிங்கள ஆற்றலின் மூலம் வெளிப்படுத்திய, பசுபிக் தீவுகளின் (பாலி, சுமாத்திரா, ஜாவா) கலாசாரங்கள் எமது நாட்டில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமைக்கான அடையாளங்கள் காணப்பட்ட போதிலும், அதிக செல்வாக்கைக் கொண்டது பாரத கலாசாரம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இது, தெளிவான தேச தனித்துவம் பற்றி பேசுகின்ற வைராக்கியமானவர்களுக்கு



விவாத முரண்பாட்டை ஏற்படுத்தும் காரணியாக அமைகின்ற போதிலும், அதனை கருத்தில் கொள்ளாதிருப்பது யதார்த்தமாகும்.

சிங்கள சங்கீதம் குறித்து, 1950 களில் பெரிதும் பேசப்பட்ட எண்ணங்கள் மற்றும் சிந்தனைகள் தொடர்பில் பார்க்கும் போது, அப்போது எமது நாட்டிற்கு சஞ்சாரம் செய்த ரத்ன ஜங்கர் பண்டிதர், நாட்டின் பல பாகத்திலும் மேற்கொண்ட சஞ்சாரத்தின்போது, தேசத்தின் தனித்துவமான சங்கீதத்தை, தென் மாகாணத்திலேயே கேட்கக் கூடியதாக இருந்ததாகவும், வானொலி வழியாக கேட்கக் கூடியதாக இருந்தது, ஹிந்தி, வங்க சம்பிரதாயங்களுக்கு உரித்தான சங்கீதம் எனவும் தெரிவித்துள்ளார். இது அக்காலத்தில் பல்வேறு விவாதங்களுக்கு காரணமாக அமைந்ததாக, பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர தெரிவித்துள்ளார். (எதிரிவீர சரத்சந்திர சதர சங்கிரஹய 1993 - சிங்கள சங்கீத அநாகதய (சிங்கள சங்கீத எதிர்காலம்))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிய ராக சங்கீதத்தின் அடிப்படையிலான ரவீந்திரநாத் தாகூரின் வங்க சங்கீதம், துணை கலாசாரத்தின் அடிப்படை இயல்பினை தோற்றியவாறு வளர்ந்தது. அதன் ஊடாக தற்போது அதன் புதுப்பிக்கப்பட்ட வடிவம் உருவாகியுள்ளது. ஆயினும் அதன் ஆணிவேர் மாற்றமடையவில்லை. அவர், தனது நாட்டில் காணப்பட்ட பாவுல் மற்றும் பாட்டியாலி சங்கீத சுரங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தார். சரத்சந்திர, பல தலைப்புகளை அடிப்படையாகக் கொண்ட தனது சதர சங்கிரஹயவில் மேற்படி விடயம் தொடர்பான விடயத்தின் இறுதியில், ராக முறைகளுக்கு முரணாக மேற்கத்தேய சங்கீதத்திற்கு அமைய, விரும்பியவாறு உருவாக்கப்படும் தற்போதைய பாடல்களின் சுவை உடனடியானதும், மிக இலகுவானதும், நீண்ட நாட்களுக்கு நிலைக்காததும் என்பதனாலேயே ஆழ்ந்த இரசிகர்களிடையே இடம்பிடிக்குமா போன்றனவும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளாகும் என குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம், அன்றிலும் பார்க்க இன்று மிக அதிக செல்வாக்குடையதாக இருக்க வேண்டும் என ஒருவர் சிந்திக்கலாம். தேசிய சங்கீதத்தின் குரலை, நீண்டகால ஆய்வுகள் மூலம் குறிப்பிட்டவொரு காலம் தொட்டு உயிர் கொடுத்த அறிஞர் டப்ளியூ.பி. மகுலொலுவ எம்மால் மறந்துவிட முடியாது. அந்த அளவிற்கு அவர் மூலம் கொண்டுவரப்பட்ட பெரும்பாலான தேசிய இராகங்கள், ரத்ன ஜங்கர் பண்டிதரின் கவனத்தை தொடாமைக்கு காரணம், மகுலொலுவ அவர்களின் வெளிப்பாடுகள், குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இடம்பெற்றிருந்தமையினால் ஆகும். இந்நாட்டு மக்களின் சங்கீதத்திலுள்ள இராகங்களின் எல்லை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, அதாவது மூன்று, நான்கு சுவரங்களுக்குள் கட்டுண்டு இருந்தமையை பேராசிரியர் ரத்ன ஜங்கரால் அறியப்பட்டிருந்தது.

1952 ஏப்ரல் 24 இல், வானொலி கலைஞர்களை வகைப்படுத்துவதற்காக ரத்ன ஜங்கர் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு வந்தார். எமது தேசிய கீதத்தை உருவாக்கியவரும் தேசத்தின் இயல்புக்கேற்ற பாடல்களுக்கு அதிக பங்களிப்பை வழங்கிய சுனில் சாந்த, பண்டிதர் ரத்ன ஜங்கரை இங்கு வரவழைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையானது, சுட்டிக்காட்டப்பட வேண்டிய மிக முக்கியமான சந்தர்ப்பமாகும். தேசிய சங்கீதம் தொடர்பில் தேடலை மேற்கொள்பவர்களுக்கு, ரத்ன ஜங்கரின் இரண்டாவது வருகை வாய்ப்பாக அமைந்துவிடும் என அவர் ஆழமாக நம்பினார்.

சுனில் சாந்தவின் சங்கீத சாஸ்த்திர அறிவின் மூலம், இசைக் கலைஞர்கள் மாத்திரமன்றி, அவரது அதிவிசேட தனித்துவத்தின் மூலம் அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள், அறிஞர்களால் மறுக்கப்பட முடியாதவையாகும்.

அவ்வாறான மாபெரும் குரல், அவருக்கே உரித்தான அக்குரல் மழுங்கடிக்கப்பட்டு அமைதியாக்கப்பட்டமையானது (Mute) எமக்கு துரதிர்ஷ்டத்தை ஏற்படுத்தியது. இவ்விடயம் எப்போது இடம்பெற்றதெனில், அர்த்தமுள்ள பாரத இராக சங்கீதத்தின் ஊடாக தேசிய சங்கீதத்தை கட்டியெழுப்ப வேண்டும் என ரத்ன ஜங்கர் ஒரு முறை குறிப்பிட்ட கருத்து, அறிஞர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கு மாற்றமான வகையிலும், பிரபல்யமான வகையிலும் தேசிய சங்கீதத்தை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்ற, சுனில் சாந்த எனும் சிறந்த சங்கீதக் கலைஞன் தனது அறிவாற்றல் மூலம் வெளிப்படுத்திய கருத்தை மழுங்கடித்த போதாகும்.

நாட்டிய கலைஞன்
நிஸ்ஸங்க தித்தெணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நவீன நாடக கலையின் தோற்றமும் ஒலிபரப்பும்

இலங்கையின் நாடகக் கலையானது, இலக்கிய நாடகம், கவிதை நாடகம் போன்றவற்றில் படிப்படியான மாற்றங்களை சந்தித்து வெற்றிகரமான மிக நீண்ட பயணத்தைக் கொண்டதாகும். இலக்கிய நாடகக் கலையின் பின்னர் தோன்றிய நாடக கலாசாரமானது நவீன நாடக கலையாக கருதப்படுகின்றது. ஆயினும் இலக்கிய யுகத்தின் முடிவுடன், நவீன நாடகக் கலைக்குள் நுழைவதற்கு முன் "உரை நடை மேடை நாடகம்" எனும் நாடகக் கலாசாரம் ஆரம்பமானது. தியேட்டர் யுகம் ஆரம்பமானமை தொடர்பில், பல்வேறு அறிஞர்களால் பல்வேறான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திரவின் கருத்து, "பஸ்தியனின் நாடக இலக்கியம். டி சில்வா, சாள்ஸ் டயஸ் போன்றவர்களின் நாடகங்கள் உரை நடை மேடை நாடகங்களாகும்." என்பதாகும். காரியவசமின் கருத்து, "பஸ்தியன், டி சில்வா, சாள்ஸ் டயஸ் ஆகியோரின் நாடக யுகம், இலக்கியம் எனப்படும் உரை நடை மேடை நாடகம யுகம் என கூறலாம்" ஆகும். ஹபுஆரச்சியின் கருத்து, "இலக்கிய நாடகங்கள், பின்னாளில் உரை நடை மேடை நாடகங்கள் என அழைக்கப்பட்டன" என்பதாகும். இக்கருத்துகள் அனைத்திலும், உண்மையை யதார்த்தமாக குறிப்பிடும் கருத்தாக, ஹபுஆரச்சியின் கருத்து அமைகின்றது. அவ்வாறாயின், பஸ்தியனின் காலத்திலிருந்து போதிபாலவின் காலம் வரையான காலப்பகுதியை, தியேட்டர் யுகம் என அழைப்பது மிக பொருத்தமானதாகும்.

பிற்காலத்தில் ஆரம்ப கால நாடக ஆசிரியர்களாக கருதப்பட்டவர்களில் ஒருவரான சீ. தொன் பஸ்தியனின் நாடகங்களை வேறு பிரித்தறியும் வகையில், ஜோன் டி சில்வா, சாள்ஸ் டயஸ் போன்றோரின் நாடகங்கள் "டீட்டர்" என அழைக்கப்பட்டது. இவ்வகையான நாடகங்கள் கிராமப்புற மக்களை அதிகளவில் கவர்ந்திருந்ததோடு, அவை மிக வேகமாக கிராமங்கள் வழியே பரவின. டீட்டர் எனும் சொல், தியேட்டர் எனும் சொல்லிலிருந்து உருவானதாகும். கிராமப்புறங்களில், தியேட்டர் எனும் சொல்லை உச்சரிப்பதற்கு கடினமாக இருந்தமையே அது அவ்வாறு மாறியமைக்கு காரணமாக இருந்தது. இந்த டீட்டர் நாடகம் நீர்கொழும்பிலேயே முதலில் பிரபல்யமடைந்தது. சிறிசேன விமலவீர, ருக்மணி தேவி, எடி ஜயமான்ன ஆகியோரை மையமாகக் கொண்டு இந்த நாட்டிய கலையின் ஆரம்பம் அமைந்தது.

அக்காலத்தில் கூட தியேட்டர் எனும் நாடக வகை குறித்து, சிங்கள மக்கள் அறிந்திருந்தனர். ஆயினும், டீட்டர் மடு, டீட்டர் காட்டுறாங்க, டீட்டர்காரவர்கள், டீட்டர் பார்க்க போறோம், டீட்டர் பாட்டு என, மக்களிடையே டீட்டரின் பிரபல்யம் 1920 களில் ஆரம்பமானது. அதன் அடிப்படையில் டீட்டர் யுகத்தின் ஆரம்பம், 1925 காலப் பகுதியில் இடம்பெற்றது என கூறுவது பொருத்தமாக அமையும்.

டீட்டர் யுகமானது, நகைச்சுவை மற்றும் இலக்கிய நாடகங்களிலிருந்து வேறுபடுவதற்கு சில காரணங்கள் காணப்படுகின்றன.

கதையின் செய்தி கொண்டுள்ள துறைசார்ந்த விடயம் வேறுபடுவதே, இதன் அடிப்படை காரணமாகும். நகைச்சுவை மற்றும் கலை இலக்கிய நாடக ஆசிரியர்கள், சமய கதைகளான, வெஸ்ஸந்தர, குச போன்றவைகளும், மேலும் பல வரலாற்று கதையை மையப்படுத்திய பண்டுகாபய, எஹெலபொல பேன்றவைகளும், வெளிநாட்டு கதைகளை கூறும் ஸ்டாக்கி, புரோடியஸ், வெலன்டைன் போன்ற நாடகங்களிலும் பார்க்க, டீட்டர் யுகமானது, பெருமளவில் சமூக நாடக வகைக்குள் உள்வாங்கப்பட்ட காலப் பகுதியாக தென்படுகின்றது. எல்.டி.ஏ. ரத்நாயக்கவின் பாக்யலீலா மற்றும் சிந்தாமணி போன்றவற்றை அதற்கான சான்றுகளாக குறிப்பிடலாம்.


உரையாடல் அதிகரித்தமை மற்றும் பாடல்களின் பயன்பாடு குறைவடைந்தமை ஆகியன, இலக்கிய நாடகங்களிலிருந்து டீட்டர் நாடகங்கள் வேறுபடும் மற்றுமொரு காரணியாகும்.

இலக்கிய நாடகம், இலக்கிய பாடல்களுக்கு அதிக முக்கியத்துவத்தை கொடுக்கும் நாடக வகையாகும். அதில், உரை நடையிலான கலந்துரையாடலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. ஆயினும், டீட்டர் கலையில் பிரதான அங்கமாக காணப்பட்டது கலந்துரையாடலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களுக்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதோடு, பாடல்கள் அரிது என்றே குறிப்பிட வேண்டும். இலக்கிய நாடகங்களிலும் பார்க்க பாடல்கள் குறைவாக இருந்த போதிலும், பெருமளவான இசைக்கருவிகளை வாசிக்கும் குழு ஒன்று டீட்டரில் காணப்பட்டது.

மேடை நாடகக் கலைஞர்கள், ஹிந்தி மற்றும் தமிழ் இராகங்களில் அமைந்த பாடல்களை அமைத்தனர். விமலவீரவின் இவ்வாறான 20 நாடகங்கள் உருவாக்கப்பட்டன. சிங்ஹலே எனப்படும் சிங்கள வீரன், பிட்டிசர கெல்ல, பிட்டிசர கொல்லா, அம்மா, ஸ்ரீ, சீதேவி, அட்டசிய விசிபஹ போன்றவற்றை அவற்றிற்கு உதாரணமாக குறிப்பிடலாம். அவரது நாடகங்கள், சிங்கள நாடு, சிங்கள இனம், பௌத்த மதத்தை கட்டியெழுப்புவது போன்றவற்றை மையமாகக் கொண்ட கதையை கூறுவதாக அமைந்திருந்தன. சிறிசேன விமலவீர உள்ளிட்ட அக்கால மேடை நாடகக் கலைஞர்கள், அக்காலத்தில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தனர். அதற்கான காரணம் திரைப்படம் எனும் விருந்தாளியின் வருகையாகும்.



1911 இல் கொழும்பில் ஊமைப் படங்கள் காண்பிப்பது ஆரம்பமானது. 1927 இல் கொழும்பு நகரில் பேசும் படம் காண்பிப்பது ஆரம்பமமானது. இதன் காரணமாக 1911 இல் நாடக காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட டவர் மண்டபம், 1931 இல் திரைப்பட காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டதோடு, நாடக காட்சிகள் இரவு 9.30 இற்கு மட்டுப்படுத்தப்பட்டது. சினிமாவினுள் நுழைந்து சினிமா நடிகர்களாக மாறுவதை விடுத்து சினிமா ஊடகத்தின் வழியாக தங்களது நாடகங்களை ரசிகர்களிடம் கொண்டு சேர்ப்பது அவர்களது அடுத்த கட்ட நடவடிக்கையாக அமைந்திருந்தது. அதற்கான ஆரம்பம், 1947 இல் பி.ஏ.டப்ளியூ. ஜயமான்னவின் 'கடவுணு பொரந்துவ' திரைப்படத்தின் மூலம் ஏற்பட்டது. அதன் பின்னர் எஸ்.எம். நாயகத்தினால் மற்றும் பல வர்த்தகர்களின் உதவியுடன், 1948 இல் 'கபட்டி ஆரக்ஷகயோ' திரைப்படம் வெளியிடப்பட்டது. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில், சிறிசேன விமலவீரவின் 'அம்மா' திரைப்படம், ஓகஸ்ட் 19 ஆம் திகதி கொழும்பில் திரையிடப்பட்டது. இவ்வனைத்து திரைப்படங்களும், அவரது மேடை நாடகங்களை அடிப்படையாக கொண்டதாக காணப்பட்டது. அவர் 10 திரப்படங்களை இயக்கினார். அம்மா, சீதேவி, பிட்டிசர கெல்ல, சிறகறுவோ, சரதியேல், பொடி புதா, அசோகா, வன மல, எகமத் எக ரட்டக, மா ஆலய கல தருணிய ஆகியன அவற்றில் அடங்கும். இந்த காலப்பகுதியில், கிரமபோனின் வருகையும் இடம்பெற்றது. இதன் காரணமாக பெரும்பாலான பிரபல மேடை நாடகங்களின் பாடல்கள், கிரமபோன் தட்டுகளில் வெளியிடப்பட்டன. அவற்றுள், கொலம்பியா, எச்.எம்.வீ. போன்ற நிறுவனங்களின் ஊடாக இவ்வாறான பாடல் தட்டுகள் வெளியிடப்பட்டன.

திரைப்படத்தின் வருகையுடன், அனைத்து மக்களும் நாடகக் கலையை கைவிட்டு விட்டு திரைப்படங்களை பார்க்க ஆரம்பித்தனர். நாடக கலையின் அழிவு, சிறிது சிறிதாக ஆரம்பித்தது, இக்காலப்பகுதியிலேயாகும்.

1940 களில் நாடக கலை தொடர்பிலான, மக்களின் கவனம் குறைவடையத் ஆரம்பித்தது. ஆயினும், பல்கலைக்கழகங்கள், நாடக கலையில் அதிக கவனத்தை செலுத்தியது. விசேடமாக பேராதெனிய பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட நாடக சங்கம் நாடகத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பைச் செய்தது. பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர அவர்கள், பேராதெனிய பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய காலத்தில், லுடோவைக் மஹ அந்துருதுமாவினால் நாடகக் கலையை வளர்கும் நோக்கில், பி.என் ஜுபால் எனும் அவுஸ்திரேலிய நாட்டு இயக்குனரை வரவழைத்து, பேரதாதெனிய பல்கலைக்கழக மாணவர்களுக்கான நாடக பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கபட்டது.

அவரது இலங்கை விஜயத்தின் பின்னர் அவரால் மொலியர், கொகொல், செகொப், வைலட் போன்ற பிரபல வெளிநாட்டு கதையாசிரியர்களின் சிங்கள கதையம்சம் கொண்ட நாடகங்கள் தயாரிக்கப்பட்டன. மேற்கத்தேய நாடகங்களை பின்பற்றியதான நடிப்பு, சிங்கள நாடகங்களுக்குள் ஊடுருவி விடுமோ என்ற ஐயம், சரத்சந்திரவின் மனதில் ஏற்பட்டது.

ஜுபாலினால் உருவாக்கப்பட்ட மேற்கத்தேய நாடகங்களை, நடுத்தர வர்க்கத்தினரே இரசித்தனர். இந்த மேற்கத்தேய நாடகங்கள் மூலம், வாழ்க்கை முறை மற்றும் வீரம், காதல், கருணை போன்ற நவரசங்களை வழங்க முடியாது என சரத்சந்திர புரிந்து கொண்டார். கேலியை மாத்திரம் மையமாகக் கொண்டதாக அமைந்த இந்த மேற்கத்தேய நாடகங்களால், எந்தவொரு சுவாரஸ்யமான, உயிரோட்டமான உணர்வுகளையும் வழங்க முடியாது என அவர் விளங்கிக் கொண்டார். ஜுபாலுடன் இணைந்து பணிபுரிந்த காலப்குதியில், நாடகங்கள் தொடர்பான அறிவை ஆராய்ச்சி மட்டத்தில் மேற்கொண்டு வந்தார். அந்த ஆய்வுகள் குறித்து, "நான் இது வரை காலமும் நாடக இயக்கத்தை மேற்கொண்டு வந்தமையானது, நாடக கலை தொடர்பில் உரிய முறையில் பயிற்சியை பெறாது, இருட்டில் தட்டுத் தடுமாறுபவன் போன்ற ஒருவனாகவே ஆகும்" எனத் தெரிவித்துள்ளார்.

மிகுதி அடுத்த இதழில்...

சிரேஷ்ட விரிவுரையாளர்
மஹாநாம விக்ரமசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுமையை நோக்கி முன்னேறுவோம்

தகவல் மற்றும் தொழில்நுட்பம், என்பதற்கு பொருத்தமான வசனம் ஒன்றை முன்வைப்பது கடினமான காரியமாக இருந்தபோதிலும், கணனி மற்றும் தொலைபேசி தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தகவல் பரிமாற்றம் என, அதனை எளிய வடிவில் கூறலாம். இன்று இந்த தொழில்நுட்ப கல்வியானது மேலும் முன்னேற்றமடைந்து, பாடசாலை கல்வியிலும் சேர்க்கப்பட்டுள்ளதோடு, பல்கலைக்கழகம் வரையிலும் பரவலடைந்துள்ளது. எமது பிள்ளைகள், உலகத்துடன் போட்டியிட்டு முன்னேறவேண்டுமாயின், தகவல் தொழில்நுட்பமானது மிக அத்தியவசியமான அங்கம் என்பதை, எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

பாடசாலை கல்வியில், தகவல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து, மாணவர்கள் மத்தியில் அது மிகப் பிரபல்யம் அடைந்துள்ளது. வினா விடை போட்டிகள், கண்காட்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், மென்பொருள் தயாரிப்பு போட்டிகள் உள்ளிட்டவை, பாடசாலைகளில் முறையாகவும் உரிய வகையில் திட்டமிடப்பட்டு மிக உயர் மட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் மேலும் மேலும் உயர் மட்டத்தில் இடம்பெற வேண்டுமாயின், தகவல் தொழில்நுட்பத்தை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களின் பங்களிப்பை, தற்போதையதிலும் பார்க்க மேலும் அவசியமாகும். அவர்கள் இற்றைப்படுத்தப்படாதிருந்தால் இவ்வாறான விடயங்கள் பின்னடைவை நோக்கிச் செல்லும் நிலை ஏற்படும்.

இன்று இலங்கையின் இணைய வசதி மிக உயர்ந்த மட்டத்தில் முன்னேற்றமடைந்துள்ளதை காண்கின்றோம். பாடசாலைகளில் இணையத்தை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் மற்றும் நேரம் குறைவாக காணப்படுகின்றபோதிலும், கணனி மற்றும் இணையத்தை பயன்படுத்துவது தொடர்பிலான மாணவர்களின் ஆர்வம் காரணமாக, அவர்கள் எவ்வாறாவது, நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முயற்சி செய்கின்றனர். அதற்கேற்ற வகையில், இப்பாடத்தை கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும், தொடர்ச்சியான சேவை முறை பயிற்சிகளின் மூலம் இற்றைப்படுத்தப்பட வேண்டும். தொழில்நுட்பத்தின் மிக வேகமான வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, ஏனைய பாடங்களிலும் பார்க்க, இப்பாடத்தில் அதிகளவிலான மாற்றங்கள் ஏற்படுவதால், இப்பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, ஏனைய துறைகளிலுள்ளோருடன் ஒப்பிடும் வகையிலான உயர்ந்த சம்பளம் கிடைக்குமாயின், அவர்கள் அந்தத் துறையில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு, சான்றிதழ் பாடநெறிகளில் உள்வாங்கப்பட்டு (CISCO) படிப்படியாக சான்றிதழ்களை பெற்று தங்களது அறிவை இற்றைப்படுத்த வேண்டியது அவசியம். எனவே, தகவல் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ் பாட நெறிகளை தொடர்வதன் மூலம் இற்றைப்படுத்திய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதானது, அச்சான்றிதழை பெற்றுக்கொள்வோருக்கு விசேட முன்னுரிமை அல்லது மேலதிக புள்ளிகளை வழங்குவதன் மூலம், இற்றைப்படுத்திய அறிவை அவர்கள் பெற்றுக்கொள்ளவதற்கான ஊக்கத்தை வழங்க முடியும். எவ்வாறாயினும், தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியுடன், ஆசிரியர்கள் இற்றைப்படுத்திய கற்பித்தல் முறைகளை மேற்கொள்ளாவிடின், மாணவர்களின் திறமையில் அது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்துடன் இணையத்தினுள் நுழைவதற்கு, ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழான மாணவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதோடு, இது, எதிர்காலத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் Tablet கணனி மூலம் இணையத்தை பயன்படுத்தும் வசதியை பெற்றுக்கொள்ளும் நிலை வரை விருத்தியடைய வேண்டும். எவ்வாறாயினும், அது முன்னேற்றமடையும் உலகத்தின் அத்தியவசியமான தேவையாக மாறியுள்ளதனால், இணையத்தை சுதந்திரமாக பயன்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக, பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை மேலும் அதிகரிக்க, அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

தரலிகா லிவேரா
பிரதி பணிப்பாளர்,
கூற்றுநிலை பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தனிமையாகும் நாம்

சமூக விலங்கான மனிதன், எப்போதும் ஏனையவர்களுடன் ஒன்றிணைந்த தொடர்பை மேற்கொள்வதன் மூலம் தனது நோக்கம் மற்றும் ஜீவனோபாயத்தை அடைந்து கொள்கிறான். மனித நாகரிகம் தொடங்கிய காலம் முதல் இடையர் யுகம், விவசாய யுகம் மற்றும் புதிய தொழில்நுட்பம் போன்ற யுகங்களை நோக்கி பரிணாமம் அடைந்த போதிலும், மனிதனின் கூட்டு இணைப்பு மற்றும் தனிப்பட்டவர்களுக்கிடையிலான தொடர்பு என்பன ஒருபோதும் அழிவடையாதிருக்கின்றமை, மனித இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கான காரணியாக அமைந்துள்ளது.

தற்போதைய சமூகத்தில், நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாடு மிக வேகமாக அதிகரித்துச் செல்வதற்கு சமாந்தரமாக அவனது வாழ்க்கை முறை சிக்கலானதும் இயந்திரமயமானதுமான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சி, கையடக்க தொலைபேசி, டெப், ஐபேட் போன்ற இயந்திர உபகரணங்கள், நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தை காண்பித்த போதிலும், அன்றாட வாழ்க்கையில் அவ்வுபகரணங்களின் பயன்பாடு, தனிநபர்களுக்கிடையிலான தொடர்பில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முற்காலத்தில் இலங்கையரிடையே, திருமணத்திற்கு முன்னர் காணப்பட்ட காதல் தொடர்பு மிக நெருக்கத்தை ஏற்படுத்தும் சிறு கவிதைகளின் மூலம் வளர்ந்தது. காதலனும் காதலியும் தங்களது கருத்துகளை, ஆக்கபூர்வமான கடிதத்தின் மூலம் பரிமாறிக் கொண்டனர். அவை பல்வேறு கவிதை மற்றும் பாடல்களால் அலங்கரிக்கப்பட்டு மணம் கமழும் காதல் கடிதமாக அமைந்ததோடு, அது அவர்களுக்கிடையே பரிமாற்றமடைந்ததன் மூலம், ஆத்மார்த்தமாக இருவரும் ஒருவரையொருவர் சரியாகவும் உள ரீதியாகவும் அறிந்துகொள்வதற்கு பெரும் பலத்தை ஏற்படுத்தியது.

ஆனால், நவீன் கையடக்க தொலைபேசியின் பாவனையுடன் அந்த ஆக்கபூர்வமான ஆற்றலுக்கு பதிலாக, நேரடியானதும் உடனடியானதுமான SMS, MMS போன்ற செய்திப் பரிமாற்றத்தின் ஊடாக எண்ணங்கள் பரிமாறப்படுவதன் மூலம், முன்பிருந்த நெருக்கமான காதல் தொடர்பு ஏற்படவில்லை. அது தவிர இந்த ஊடகத்தின் வழியாக பல்வேறு முறையற்ற வீடியோ இணைப்புகள் போன்றவை பரிமாறப்படுவதனால், காதல் தொடர்பிற்கும் அப்பாற்பட்ட பாலியல் வாழ்க்கை தொடர்பான எண்ணமும் உருவாக்கப்படுகின்றது. முற்கால கலாசாரத்தில் மறைமுகமாக இருந்த அவ்விடயம், தற்காலத்தில் சர்வ சாதாரணமானதாக மாறியுள்ளமை, கலாசார சீரழிவுக்கு வழிவகுத்துள்ளது.

நவீன தொழில்நுட்பத்திற்கு அடிமையானதன் காரணமாக, புத்தகங்களின் பயன்பாடு, வாசித்தல் போன்றன அருகி வருகின்றன. இணையத்தளத்தின் மூலம், மிக குறைந்த நேரத்தில் பாரிய தகவல்களை தரவிறக்கிக் கொள்ளலாம் என்பது ஒரு பிரயோசனமாக விடயமாகும். ஆயினும் அவற்றிற்கு அடிமையாவதனால், மனிதனின் ஆழமான ஆத்மார்த்தமான தொடர்புகள், சுக துக்கங்களை அடைவதனை அவை குறைக்கின்றன. அது போன்று புத்தகங்களை வாசிப்பதன் மூலம் கிடைக்கின்ற இனிமையான அனுபவம் தனியானது, அதை ஒவ்வொருவரும் அனுபவிக்கும் விதம் வேறுபட்டது. அவ்வாறான கல்வி, ஆற்றல் மிக்கவர்கள் சமூக முன்னேற்றத்திற்கு நேரடியான பங்களிப்பை வழங்கும் ஒழுக்காற்றல் கொண்டவர்களாவர்.

அந்த வகையில், தொழில்நுட்ப முறைமை, மனிதர்களை உணர்வற்றவர்களாகவும், எதிர்பார்ப்புகள் அற்றவர்களாகவும் மாற்றியுள்ளது. தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டின் மூலம், ஒப்பீட்டளவில் உதாசீன மனத்தன்மையைக் கொண்டவர்கள் உருவாவதை தடுக்க முடியாது. எமது வாழ்க்கை, தொழில்நுட்ப உபகரணங்களின் மீது தங்கியுள்ள வாழ்க்கையாக மாறிவிட்டதா, எமது வாழ்க்கையை இயந்திரங்களிடம் கொடுத்துவிட்டு, எமது உடல் பலத்தின் மூலம் எவ்வாறு பிரயோசனமடைவது என்பது தொடர்பில் நாம் மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும்.

தற்காலத்தில் மனிதர்கள் சமூக வலையமைப்புகளில் எப்போதும் வலம் வருவதன் மூலம் ஏனையவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகின்றனர். அங்கு மனிதர்கள் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்வதில்லை. இணைய கலந்துரையாடல் (Chat) போன்ற முறைகளின் மூலம் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது பெயர் மற்றும் உருவத்தை மாற்றி போலியான பெயர் மற்றும் தகவல்கள் மூலம் எதிர்முனையிலுள்ளவரை ஏமாற்றவும் செய்கின்றனர். இதன்போது பிழையான தொடர்புகள் ஏற்படுவதன் மூலம் அவை, பாலியல் பலாத்காரம், மோசடி, குடும்ப பிரச்சினைகள், தற்கொலை, தொற்றுநோய்கள் போன்ற சமூகத்தில் விலக்கப்பட்ட விடயங்கள் பெருகுவதற்கும், தொழில்நுட்பத்தின் முறையற்ற பயன்பாடு வழி கோலுகின்றது.

அது போன்று பலம் மிக்க மனித தொடர்பு அல்லது சமூக உட்செயற்பாடுகள் தோன்றுவது, கண்களால் இடம்பெறும் நேரடி தொடர்பு, எண்ணங்கள், தொடுகை போன்ற முக்கியமான காரணிகள் ஒன்றிணைவதன் மூலமாகும். ஆயினும் தொழில்நுட்ப உலகத்தில் இந்த விடயங்கள் அருகி வருகின்றமை கண்கூடானது.

மேலும் நவீன சமூகத்தில், ஸ்மாட் தொலைபேசி பாவனையின் அதிகரிப்புடன் செல்பி புகைப்படங்களை எடுப்பது அதிகரித்துள்ளது. சமூகத்தில் சந்தோசமான தருணங்களில் மாத்திரமன்றி ஆபத்தான தருணங்களிலும் செல்பி புகைப்படங்களை எடுப்பது பழக்கமாக மாறியுள்ளது. இங்கு மிகக் குறிப்பாக கூறவேண்டியது யாதெனில், மனசங்கடம் மிக்க சந்தர்ப்பங்களில் கூட, சிலர் அவற்றை வீடியோவாக பதிவு செய்கின்றனர். அவர்களை, சமூக தர்மங்களை துறந்தவர்கள் என்றே கூறவேண்டும். விபத்துகள், மரணம், குற்றம் போன்றவை இடம்பெறும் இடங்களில் கூட, விபத்திற்குள்ளானவருக்கு செய்ய வேண்டிய உதவிகள் தொடர்பில் சிந்திக்காது, அதனை இணையத்தில் பகிர்வது தொடர்பில் ஆர்வம் காட்டுவது, மனித உணர்வுகளிலிருந்து விடுபட்ட கூரீர விடயமாகும்.

தற்கால சமூகத்தின் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பில் காணப்படும் எவ்வாறான ஆசைகள் காணப்படுகின்றது என கூறுவோமாயின், திருமண வைபவங்களில் கூட சாஸ்த்திர சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டு, புதிய விடயங்கள் ஒன்றிணைந்துள்ளன. திருமண வைபத்திற்கு முன்னர் திருமண ஜோடியின் புகைப்படம் எடுத்தல் (Pre Shoot) போன்ற விடயம், திருமண வைபவத்தில் ஆடல், பாடல் வீடியோ பதிவுகளால் நிறைந்த அதி நவீனமயமாக்கப்பட்ட திருமண வைபவங்களை இன்று அதிகளவில் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான விசேட சந்தர்ப்பங்களின்போது கூட, மிக முக்கியமான நல்லுறவு தொடர்பில் கவனம் செலுத்தாது, வர்த்தக தொழில்நுட்ப உபகரணங்கள் தலைதூக்கியிருப்பது, கலசாரத்தின் வேகமான மாற்றத்திற்கு காரணமாக அமைகின்றது.

தற்கால இளைஞர் சமுதாயம் மற்றும் சிறுவர்கள், இணையத்தில் நினைத்தபடி உலாவுவதன் மூலம், கணனி விளையாட்டுகள், பேஸ்புக், ட்விட்டர் போன்ற வலையமைப்புகளில் காணாமல் போகின்றவர்களாக மாறியுள்ளனர். இவற்றிற்கு அடிமையாவதன் மூலம் பேஸ்புக் மனஅழுத்தம் (Facebook depression) எனும் மனநோய்க்கு உள்ளாகின்ற நிலை ஏற்பட்டுள்ளதாக, பேராசிரியர் க்வென் ஓ கிபே (Dr. Gwenn O' Keefe) சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறான சமூக வலையமைப்புகளின் அதிக பாவனையின் மூலம் அதிக ஆபத்தான சமூக விளைவுகள் ஏற்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விசேடமாக இன்று சிறுவர்களிடையே, குழு விளையாட்டுகள் இல்லாமல் சென்றுள்ளதால், கூட்டாக செயற்படுதல், வெற்றி, தோல்வியை ஏற்றுக்கொள்ளுதல், பிறர் நலன் போன்றவை இல்லாமல் சென்று, உணர்ச்சிகள் அற்ற, இயந்திர, சுயநலம் மிக்க பிள்ளைச் சமூகம் உருவாகின்றமை, நாட்டின் எதிர்காலத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும் நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு அமைய சிறுவர்கள் மற்றும் இளைஞர் சமுதாயம், கணனிக்கு அடிமையாவதன் காரணமாக இயற்கையின் அழகு, வானம், மேகங்கள், நட்சத்திரங்கள், பறவைகள், விலங்குள் பற்றி பார்த்தல் மற்றும் அவை குறித்து ஆராய்தல் போன்றன மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், தூரநோக்கும் தன்மை இல்லாதொழிந்துள்ளது. இதனால் இயற்கை தொடர்பான அறிவு இல்லாமல் செல்கின்ற பாரிய அனர்த்தத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. முற்காலத்தில் இயற்கையின் இரசனையைக் கொண்ட மனிதர்களின் மூலம், சிறந்த கட்டுக்கோப்புகளைக் கொண்ட சமூகத்தை நேசிக்கின்றவர்கள் உருவாகினர். நவீன தொழில்நுட்ப உபகரணங்களில் உழலும் நவீன யுகம், மனித கட்டுக்கோப்புகளற்ற கூரீர சமூகத்தை உருவாக்கியுள்ளது.

அன்றாட பொது போக்குவரத்து சேவைகளின்போது, கை பயனின்றிய (Hand Free) உபகரணத்தை பயன்படுத்தியவாறு பயணிக்கும் இளைஞர், யுவதிகள் தங்களுக்கு அருகில் யார் இருக்கின்றார் என்பது கூட தெரியாதவர்களாக பயணிப்பதை நாம் காண்கின்றோம். எமது சமூகம், இனிய நட்புத் தொடர்புகளால் கட்டியெழுப்பப்பட்ட கூட்டாக செயற்படுவதை நோக்காகக் கொண்டதாக இருந்தது. நவீனமயமாக்கப்பட்ட தற்கால சமூகம், சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் அதனை சிறிது சிறிதாக இல்லாமல் செய்துள்ளமையானது பாரிய சமூக வேற்றுமையை தோற்றுவித்துள்ளது.

உலகமயமாதல் எனும் சமூக நீரோட்டத்தில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், புதிய உபகரணங்களின் பாவனை அதிகரிப்பது தடுக்க முடியாத ஒன்றாகும். ஆயினும், அவற்றை அன்றாடம் பயன்படுத்தும்போது, சுய சிந்தனையுடன், புத்திசாதுர்யமாக செயற்படுகின்ற, திறன்மிக்க, அறிவார்ந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர் சமுதாயம் ஒன்று நாட்டிற்கு அவசியம் என்பதோடு, அது தொடர்பில் உகந்த கல்வி முறையை தயாரிப்பது அவசியமாகும். அவ்வாறே பிரதானமாக இராஜதந்திர மற்றும் மேற்படி விடயங்கள் தொடர்பில் சமூக நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் சாதகமான முயற்சிகளை மேற்கொள்வது காலத்தின் அவசியமாக காணப்படுகின்றது. அவ்வாறில்லையெனின், தொழில்நுட்ப முன்னேற்றம், பலனுள்ள மனித தொடர்புகளை உருவாக்குவதற்காக அன்றி, அவ்வாறான தொடர்புகளிலிருந்து தூரமாக்கப்பட்ட இயந்திர, உதாசீன மனத்தன்மையைக் கொண்ட, எதிர்கால சமுதாயம் உருவாவதற்கான வழி ஏற்படுவதை தடுக்க முடியாத காரணியாக அமைந்து விடும்.

மஞ்சுளா குணதிலக
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வலையமைப்பு பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ITU/NIA சர்வதேச தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் சேவையாளர் நிகழ்ச்சி - 2016

இலங்கையிலுள்ள விசேட தேவைகளைக் கொண்டோர் தொடர்பில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் நோக்கில் இந்த ITU-NIA சர்வதேச தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் சேவையாளர் (IIV) நிகழ்ச்சி, 2016" எனும் இந்நிகழ்வு, சர்வதேச தொலைத் தொடர்பாடல் சங்கம் (ITU) மற்றும் கொரிய தேசிய தகவல் நிறுவனத்துடன் (NIA) தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இணைப்பை ஏற்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வருடம், கொரிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 12 மாணவர்களைக் கொண்ட மூன்று தொண்டர் குழுக்கள் இலங்கைக்கு வந்திருந்ததோடு, அவர்கள் ஜூலை 07 தொடக்கம் ஒகஸ்ட் மாதம் வரை, மூன்று கல்வி மத்திய நிலையங்களில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தினர். E-Nable திட்டத்தின் கீழ் இந்நிகழ்வினை, இலங்கைத் தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்தது. இந்த தொண்டர் குழு, புறக்கோட்டையிலுள்ள விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பாடசாலை, வத்தேகம தொழிற்பயிற்சி நிறுவனம், ரத்மலானை, கொத்தலாவலபுர மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் இந்த பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததோடு, இதில் விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

2001 ஆம் ஆண்டு முதல், கொரிய தகவல் தொழில்நுட்ப தொண்டர் நிகழ்ச்சிக்கு (KIV), அந்நாட்டின் விஞ்ஞான நடவடிக்கை தொடர்பான அமைச்சு மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் தொடர்பான கொரியாவின் எதிர்கால திட்டமிடல் முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் கொரிய தேசிய தகவல் நிறுவனமும் பூரண அனுசரணை வழங்கி வருகின்றது. தென் கொரிய அரசாங்கத்தால் ஒவ்வொரு வருடமும், தற்களது பயிற்றுவிக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொண்டர் குழுவை, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அனுப்பி வருகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்நிகழ்ச்சியின் மூலம் இலங்கை, தனது விசேட கல்வித் தேவை துறையை மேலும் முன்னேற்றமடையச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது எனக் கூறலாம்.

"TIK" குழுவில், டொங்ஹெயோன் க்வாக் (குழுவின் தலைவர்), ஹியுன்கியு லீ, சன்க்ஹீ யங், மின்சோ கிம் ஆகியோர் உள்ளடங்குவதோடு, அவர்கள் கொத்தலாவலபுர மகாவித்தியாலயத்தில் இந்நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர். "Eol-C-Gu-Na" குழுவில், ஹியுன்கியும் கிம், ஜியோங்ஜே ச்சோய், போம் ச்சுங், சொயங் கிம் ஆகியோர் உள்ளடங்குவதோடு அவர்கள் புறக்கோட்டை செவன, விசேட கல்வி பாடசாலைகளில் பயிற்சி வழங்கினர்.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, முதன் முறையாக மேல் மாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து Training Programme for Teachers Involved in Special Education நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தது.

**வாசித்து வெல்லுங்கள்**

"அதிர்வெண்" பத்திரிகை செய்தி மடலின் வாசகர்களான உங்களுக்கு பரிசாக

## 8GB Pen Drivers 3 இனை வெற்றி பெறும் வாய்ப்பு



ஒவ்வொரு இதழிலும் நாம் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதிலை தபால் அட்டையின் மூலம் அனுப்பி 8GB Pen Drivers 3 இனை வெல்லுங்கள். தபால் அட்டையில் உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு அழகிய கூப்பனாக வடிவமைத்து அனுப்பி வையுங்கள்.

இந்த இதழின் கேள்வி: **இலங்கைக்கு உரித்தான எப்.எம். அலைவரிசை பட்டை (FM Spectrum) எதிலிருந்து எதுவரை உள்ளடங்குகின்றது?**

விடையை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**ஆசிரியர்,**
**அதிர்வெண்,**
**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

**இல. 276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**




தொலைபேசி - +94112689345
மின்னஞ்சல் - dgtsl@trc.gov.lk
இணையத்தளம் - www.trc.gov.lk
உடனடி தொலைபேசி - 1900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org